பெருநகர சென்னை மாநகராட்சி மன்றம்
திருவள்ளுவராண்டு 2057, ஆவணி மாதம் 11 – ஆம் நாள்,
2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28 ஆம் நாள்
வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு ரிப்பன் கட்டிடத்தில்
உள்ள மன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்ட
நிகழ்ச்சிகள்

மாண்புமிகு மேயர்

முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து.

(அவையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது)

திருக்குறள். 32 – "இன்னா செய்யாமை" என்கிற அதிகாரம். குறள் எண். 317.

"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணா செய்யாமை தலை. "

எவ்வளவிலும், எப்பொழுதும், எவரையும் இழிவுபடுத்தும் செயலை மனத்தால் கூட நினைக்காமல் இருப்பதே முதன்மையான சிறப்பாகும்.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28–ஆம் நாள் வெள்ளிக்கிழமை இம்மன்றத்தின் சாதாரண கூட்ட நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன.

(தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை மாண்புமிகு மேயர் அவர்கள் படிக்க மன்ற உறுப்பினர்கள் அனைவரும் திரும்ப சொல்லுதல்)

தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்திய குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாக கொண்டு எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்கிற எந்த வகையிலும்

கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படை கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற, சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழு பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

அனைவருக்கும் வணக்கம்.

மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோர் காட்டிய வழியில் சமூக நீதி பாதையில் வெற்றி நடை போட்டு தமிழ்நாட்டை வழி நடத்தி வந்தார்.

கழக தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, சமூக நீதி நோக்கில் கொண்ட வந்த திட்டம் தான் 'அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டம்'. திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் கொண்டு வந்த 'அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டத்தில்' வெளிநாடுகளில் பயின்று வரும் பட்டியலின மாணவர்களின் உயர்கல்வியை தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பகுத்தறிவு பகலவன் 'தந்தை பெரியார்', 'பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா', முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோர் வழிநின்று, தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளாக நாடே போற்றும் வகையில், பல்வேறு திட்டங்களை தந்து தமிழ்நாட்டை வெற்றிப்பாதைக்கு கொண்டு சென்ற தளபதி திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் அறிக்கையில் சொல்லியதையும் செய்தார், சொல்லாததையும் செய்தார் என்பதை அனைவரும் அறிவோம்.

கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் தலைவர் திரு.அபஜித் திப்கே அவர்கள், தமிழ்நாட்டின் சிறந்த முதலமைச்சராக இருந்த தளபதி திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டமிட்ட செயல்பாடுகளால் தமிழ்நாடு

தொழில் துறை மற்றும் பொருளாதார துறையில் பெரிய அளவில் வெற்றி பெற்றிருக்கிறது என்று புகழாரம் சூட்டியுள்ளார் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன். **(கைதட்டல்)**

கவன ஈர்ப்பு தீர்மானம்

பெருநகர சென்னை மாநகராட்சியில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்கள் நல பணிகளை மேம்படுத்துவதற்காகவும், மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியினை விடுவிக்குமாறும், பொதுமக்களின் நலன் கருதி ரத்து செய்யப்பட்ட பணிகளை மீண்டும் துவங்குவதற்கும், இது சம்மந்தமாக அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்புவதற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி 165 /1 ன்படி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வருவதற்கு ஆளுங்கட்சி தலைவர் அவர்கள் கடிதம் அளித்துள்ளார்கள். எனவே, இத் தீர்மானத்தின் மீது ஆளுங்கட்சி தலைவர் அவர்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திரு. ந. இராமலிங்கம், ஆளுங்கட்சி தலைவர்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, மாமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே நடைபெற்று வந்த பணிகள் முழு வீச்சில் நடைபெறாமல் மெத்தனமாக நடைபெற்று வருகிறது. பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது குறிப்பாக, வேளச்சேரி – குருநானக் கல்லூரி மேம்பாலம் ஆகும்.

அதே போல், 'எல் நினோ' தாக்கம் காரணமாக சென்னை மாநகரில் இயல்பை விட அதிகப்படியான மழைப்பொழிவு இருக்கும் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து, சென்னை மாநகரை காக்க வேண்டும் எனில், நடைபெற்று வரும் மழைநீர் வடிகால்வாய் பணிகளை விரைவுப்படுத்தி முடிக்க வேண்டும். ஆனால், போதிய நிதி

இல்லாமல் ஒப்பந்ததாரர்களுக்கு பணம் வழங்காத காரணத்தினால், பணிகள் முடிவுறாத நிலை உள்ளது. இதனால், அரசு, தேவையான நிதியை, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு வேண்டும். நிதி ஒதுக்கீடு செய்யவில்லை என்றால், பணிகள் நிறுத்தப்பட்டு மழைக்காலத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். பேருந்து சாலைகள், உட்புற சாலைகள் மற்றும் சாலைகளில் பேட்ச் ஒர்க் பணிகளுக்கும் நிதி இல்லாமல் பணிகள் நடைபெறவில்லை.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தினால், மாமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் வார்டுகளில் உள்ள அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை உள்ளது. ஆகவே, மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

மேலும், இம் மாமன்றத்தின் மூலம் அனுமதி அளிக்கப்பட்ட மழைநீர் வடிகால்வாய் பணிகள், நடைபாதைகள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் நலன் சார்ந்த, ரத்து செய்யப்பட்ட பணிகளை பரிசீலித்து மீண்டும் துவங்கிட வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு மேயர் அவர்கள், இவற்றை கவனத்தில் எடுத்து கொண்டு, தமிழ்நாடு அரசு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான அவசர நிதியுதவியை அளிக்கும் வகையில், அரசுக்கு முன்மொழிவு அனுப்பி நிதியை பெற வழிவகை காண வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டு கொள்கிறேன். நன்றி, வணக்கம். **(கைதட்டல்)**

மாண்புமிகு மேயர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாண்புமிகு மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, அருமை மாமன்ற உறுப்பினர்களே, ஊடக துறை மற்றும் பத்திரிகை துறையினை சார்ந்த நண்பர்களே, மாநகராட்சியின் அனைத்து துறை சார்ந்த அலுவலர்களே அனைவருக்கும் வணக்கம்.

1. ஆளுங்கட்சி தலைவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் அரசின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ளது.
2. முன்னாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி காலத்தில் மாநகராட்சிக்கு தேவையான நிதி மற்றும் நிர்வாக ஆதரவுகள் உரிய நேரத்தில் வழங்கப்பட்டது.
3. கடந்த சில மாதங்களாக மாநகராட்சியின் நிதிநிலை பாதிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர்களுக்கு நிலுவை தொகைகள் வழங்கப்படாமை மற்றும் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் நிதியின்மை காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறது.
4. மக்களின் நீண்டகால தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு அறிவிக்கப்பட்ட வேளச்சேரி பீனிக்ஸ் மால் அருகில் உள்ள மேம்பாலம், நடைபாதை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இத் திட்டங்கள் தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும்.
5. மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்றும், அது தனிப்பட்ட தேவைக்காக அல்லாது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவே கோரப்படுகிறது.
6. வார்டு 169–ல் பொதுமக்கள் கோரிய அரசு பண்ணை ஜோதிமாநகர் பகுதியில் உடற்பயிற்சி கூடம் மற்றும் நூலகம் போன்ற வசதிகள் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி விடுவிக்கப்படாததால் செயல்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக மாண்புமிகு மேயர் அவர்கள் அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.
7. மாநகராட்சி நிதி பற்றாக்குறையை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று சிறப்பு நிதி பெற ஆணையர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. மாநகராட்சி ஒப்பந்ததாரர்களின் நிலுவை பில் தொகைகளை உடனடியாக வழங்க அரசிடமிருந்து தேவையான நிதியை பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
9. அம்மா உணவகங்கள், காலை உணவு திட்டம் உள்ளிட்ட அரசு திட்டங்களுக்காக மாநகராட்சி மேற்கொள்ளும் கூடுதல் செலவுகளுக்கு அரசிடமிருந்து தனி நிதி பெற கருத்துரு அனுப்ப வேண்டும்.
10. தூய்மை பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு உள்ளிட்ட நல வசதிகளை வழங்குவதற்கான அரசாணை பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
11. தூய்மை பணியாளர்களுக்கான உணவு வசதிகளில் குறைபாடுகள் உள்ளன. எனவே, அவர்களுக்கு தினசரி உணவு படியாக ரூ.100 வழங்க அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.
12. தூய்மை பணியாளர்களின் ஓய்வு, கழிப்பறை, உடைமாற்றம் மற்றும் உணவு உண்ணும் வசதிக்காக அனைத்து வார்டுகளிலும் தனி கட்டிடங்கள் அமைக்கும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட வேண்டும்.
13. திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களுக்கான கல்வெட்டுகள் அமைக்கப்படவில்லை. இவை அமைக்கப்பட தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
14. ஆற்காடு சாலை உள்ளிட்ட பகுதிகளில் நிறைவடையாமல் உள்ள மழைநீர் வடிகால்வாய் பணிகள் மற்றும் பிற பணிகள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும்.
15. மழைக்காலத்திற்கு முன்னர் சேதமடைந்த சாலைகளில் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
16. சென்னை மாநகரின் வளர்ச்சியை கருத்திற் கொண்டு கட்டிட விதிமுறைகளில் திருத்தம் செய்து, அனுமதிக்கப்படும் கட்டிட உயர வரம்பை 14 மீட்டரிலிருந்து 20 மீட்டராக உயர்த்துவது மற்றும் Ground + 3 என்று இருப்பதை Ground + 4 என்று அனுமதி வழங்குவதற்கான அனுமதியினை பெற அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட வேண்டும்.

17.ஆளுங்கட்சி தலைவர் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக கொண்டு வந்த தீர்மானத்தை துணை மேயர் என்கிற முறையில் வரவேற்று அமைகிறேன், நன்றி, வண்க்கம்.

மாண்புமிகு மேயர்

மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இந்த மன்றத்தில் பதிவு செய்கிறேன். நன்றி.

முதலில் கேள்வி நேரம். மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. எம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், வார்டு எண்.142.

திரு. எம். கிருஷ்ணமூர்த்தி

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே உங்கள் அனைவருக்கும் முதலில் என் நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி

சைதாப்பேட்டை தொகுதி மண்டலம்–10, 142–வது வார்டு புதிய மழைநீர் வடிகால்வாய் – பஜார்சாலை, குயவர் வீதி, கிழக்கு ஜோன்ஸ் சாலை வழியாக ரெட்டி குப்பம் கால்வாய் மூலம் அடையாறு ஆற்றுக்கு செல்வதற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி பெற்ற நிலையில் நிதி இல்லை என நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை, மழையினால் பாதிக்கப்பட்டுள்ள மேற்கண்ட பகுதிக்கு எப்பொழுது பணிகள் நடைபெறும் என தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

பதில்

மண்டலம்–10, வார்டு–142க்கு உட்பட்ட பஜார் சாலை சந்து, குயவர் தெரு மற்றும் கிழக்கு ஜோன்ஸ் சாலை வழியாக ரெட்டிகுப்பம் கால்வாய் மூலமாக அடையாறு ஆற்றுக்கு செல்ல ஏதுவாக புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்காக

பஜார் சாலை சந்து	–	ரூ.28.87 இலட்சம்
குயவர் தெரு	–	ரூ.1.02 கோடி

கிழக்கு ஜோன்ஸ் சாலை – ரூ.1.24 கோடியில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மழைநீர் வடிகால்வாய் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், வரும் நிதியாண்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திரு. எம். கிருஷ்ணமூர்த்தி

மாண்புமிகு மேயர் அவர்களுக்கு ஒரு கனிவான வேண்டுகோள்.

மாண்புமிகு முன்னாள் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.4.39 கோடி செலவில் கட்டப்பட்ட சமுதாய நல கூடம், கடந்த பிப்ரவரி மாதத்தில் முன்னாள் துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. எனினும், திறப்பு விழா நடைபெற்றதிலிருந்து மூன்று மாதங்களுக்கும் மேலாக, அக்கூடத்திற்கான வாடகை நிர்ணயம் செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கவில்லை. மேலும், இதுகுறித்து வார்டு குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரு மாதங்களுக்கு முன்பே அனுப்பப்பட்டிருந்த போதிலும், இதுவரை உரிய அனுமதி வழங்கப்படவில்லை. விரைவான நடவடிக்கை மேற்கொண்டு சமுதாய நல கூடத்தை மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

மாண்புமிகு மேயர்

ஒரு வார காலத்திற்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், தற்பொழுது மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர மதிப்பூதியமான ரூ.10,000 தொகையை ரூ.50,000 ஆக உயர்த்தி வழங்கிட வேண்டும் என்பது மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையாக இருப்பதை மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

அதே போன்று, நிலைக்குழு தலைவர்களுக்கும் வார்டு குழு தலைவர்களுக்கும் அலுவல் பணிகளை மேற்கொள்ள வாகன வசதி ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்பதும் மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையாக இருப்பதை மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திரு. எம். கிருஷ்ணமூர்த்தி

பெருநகர சென்னை மாநகராட்சியில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்ற அதே வேளையில், சென்னை மாநகரின் பல பகுதிகளின் சாலைகளில் மேடு, பள்ளங்கள், சீரமைக்கப்படாத சாலை வெட்டு பணிகள் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் குறைபாடுகள் அதிக அளவில் காணப்படுகிறது. இவ்வகை சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக முந்தைய ஆட்சி காலத்தில் ஒவ்வொரு வார்டிற்கும் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், தற்போது ஒவ்வொரு வார்டிற்கும் ரூ.7.50 இலட்சம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் தொகை தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய இயலாது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

மாநகராட்சியில் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக தற்போது ஒவ்வொரு வார்டிற்கும் ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
மேலும், வரும் அக்டோபர் மாதத்தில் தேவையின் அடிப்படையில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, அவசியமான சாலை சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள மாநகராட்சி நடவடிக்கை எடுக்கும் என அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். கிருஷ்ணமூர்த்தி

நன்றி.
மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. டி.வி. செம்மொழி அவர்கள் வார்டு எண் – 104.

திரு. டி.வி. செம்மொழி
கேள்வி

மாண்புமிகு மேயர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்களின் நீண்டநாள் கனவான PPP மாடலில் மெரினா கடற்கரையில் ரோப் கார் வசதி அமைப்பதற்கு 2026–2027 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அந்தப் பணி எப்போழுது துவங்க உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

பதில்

மெரினா கடற்கரையில் உள்ள நேப்பியர் பாலத்திலிருந்து கலங்கரை விளக்கம் (Light House) வரை ரோப் கார் (rope car) அமைப்பதற்க்கு 'ரைட்ஸ் லிமிடெட்' (RITES Limited) நிறுவனம் மண் பரிசோதனையை மேற்கொண்டு, அதற்கான வடிவமைப்பு மற்றும் சாத்தியக்கூறு குறித்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. ஆய்வு முடிவுகள் மற்றும் தளத்தின் நிலையை ஆய்வு செய்ததில், முன்மொழியப்பட்ட திட்ட இடம், நடைமுறையில் உள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) விதிகளின்படி CRZIA பிரிவின் கீழ் வருவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், அடையாளம் காணப்பட்ட இடங்கள் ஆமைகள் முட்டையிடும் முக்கிய இடங்களாகவும், கடுமையான பாதுகாப்பு தேவைப்படும் சூழலியல் ரீதியாக உணர்திறன் மிக்க பகுதிகளாகவும் உள்ளன.

மண் பரிசோதனை மற்றும் சாத்தியக்கூறு மதிப்பீட்டின்படி, அப்பகுதியின் மண் தன்மை மற்றும் புவி–தொழில்நுட்ப (Geotechnical) சவால்களை கருத்தில் கொள்ளும்போது, முன்மொழியப்பட்ட இடங்கள் இயற்கை பேரிடர்கள் மற்றும் தீவிரமான கடலோர நிகழ்வுகளை தாங்கும் திறன் கொண்டவையாக இருக்காது என்று தெரிய வருகிறது.

எனவே, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பொது பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப சாத்தியக்கூறு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, மெரினா கடற்கரையில் நேப்பியர் பாலத்திலிருந்து கலங்கரை விளக்கம் வரை ரோப் கார் அமைக்கும் திட்டத்தின் பணியினை மேற்கொள்ளுவதற்கான சாத்தியகூறுகள் இல்லை. இருப்பினும் வேறு கலந்தாளுநர் நியமனம் செய்து அறிக்கை பெற்று சாத்தியகூறுகள்

அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திரு. டி.வி. செம்மொழி

நன்றி.

சென்னை மாநகரின் விளையாட்டு திடல்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் இடங்களில், இருசக்கர மற்றும் நான்கு சக்கர மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் நிலையங்களை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேலும், தனியார்–பொது கூட்டாண்மை (PPP) முறையில் சார்ஜிங் நிலையங்கள் அமைக்க முன்வருபவர்களின் பங்களிப்பை பயன்படுத்தி கொள்ளலாம் என்றாலும், மாநகராட்சி சார்பில் நேரடியாக அமைக்கப்படும் இலவச சார்ஜிங் வசதிகள் சென்னை மாநகர மக்களுக்கும், நகரிற்கு வருகை தருவோருக்கும் பெரிதும் பயனளிக்கும்.

அத்துடன், மாநகராட்சி பராமரிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள ஓட்டேரி நல்லா மற்றும் விருகம்பாக்கம் கால்வாய்களுக்கு முறையே ரூ.60 கோடி மற்றும் ரூ.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதே போன்று, சென்னை மாநகருக்குள் அமைந்துள்ள அனைத்து ஏரிகளையும் குறிப்பாக, அம்பத்தூர் ஏரி மற்றும் கொரட்டூர் ஏரி உள்ளிட்ட முக்கிய நீர்நிலைகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் பராமரிப்பின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.ப. சுப்பிரமணி அவர்கள், வார்டு எண் – 139.

திரு.ப. சுப்பிரமணி

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு

தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, அனைவருக்கும் வணக்கம். எங்கள் தலைவர் திரு. வை. கோ. அவர்களை வணங்குகிறேன்.

கேள்வி

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் அண்மையில் பொதுமக்களின் மீது சுமத்தப்பட்ட சொத்து வரி பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அதிரடி வரி உயர்வு நடுத்தர மற்றும் ஏழை எளிய பொது மக்களுக்கு மிக கடுமையான பொருளாதார சுமையையும், பெரும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்களின் மிக முக்கியமான இப்பிரச்சனையை கருத்திற் கொண்டு தற்போதைய சூழலில் இந்த அதிகப்படியான வரி உயர்வை குறைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, 139 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பிலும், பொதுமக்கள் மீது வரிச்சுமையை குறைக்க வேண்டிய அவசியம் இந்த தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு மேயர், உயர்திரு ஆணையர் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு மேயர்

பதில்

பெருநகர சென்னை மாநகராட்சியில், 2018 ஆம் ஆண்டு சொத்து உரிமையாளர்களால் தெரிவிக்கப்பட்ட சுய அறிவிப்பு மூலமாக பதிவு செய்யப்பட்ட கட்டிட அளவுகள் பயன்பாடு அடிப்படையில், சுமார் 3.49 இலட்சம் எண்ணிக்கையிலான சொத்துகளுக்கு, திருத்திய சொத்துவரி மதிப்பீடு மேற்கொள்ள ஆணையிடப்பட்டது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திருத்திய வரிமதிப்பீட்டு ஆணைகள் குறித்து, மறுபரிசீலனை செய்யுமாறு வலியுறுத்தி, கடந்த சில நாட்களாக பொதுமக்களிடமிருந்து பல கோரிக்கைகள் மாநகராட்சியால் பெறப்பட்டது.

எனவே, திருத்திய சொத்துவரி மதிப்பீடு ஆணை தொடர்பாக பொதுமக்கள் எழுப்பிய கோரிக்கைகள் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியால் நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும், சொத்து வரியானது. திருத்திய சொத்துவரி மதிப்பீட்டிற்கு முன்பு நடைமுறையில் இருந்த தொகையே, மீண்டும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.ம. கமல், அவர்கள் வார்டுஎண் – 86.

திரு.ம. கமல்

திராவிட மாடல் நாயகன் தளபதி அவர்களை வணங்கி, மாண்புமிகு சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் அவர்களை வணங்கி, எங்கள் மாவட்ட கழக செயலாளர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்களை வணங்கி, மாண்புமிகு மேயர் அவர்கள், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், பேச வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர், நியமனக்குழு உறுப்பினர்கள், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், சக மாமன்ற உறுப்பினர்கள், ஊடக துறையினை சார்ந்த நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி

மண்டலம் 7, வார்டு 86 க்கு உட்பட்ட அம்பத்தூர் விஜிஎன் லே அவுட் பகுதியில் கட்டபட்டுள்ள மழைநீர் வடிகால்வாயின் மீதம் உள்ள 50மீ எப்போது கட்டி தரப்படும் ?

மாண்புமிகு மேயர்

பதில்

மண்டலம்–7, வார்டு–86ல் வி.ஜி.என். மனைப்பிரிவில் அமைந்துள்ள வி.ஜி.என். கால்வாய் சுமார் 560.00 மீட்டர் நீளத்திற்கு கொசஸ்தலையாறு ஆசிய வங்கி நிதியின் கீழ் 4.00 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

நிதி பற்றாக்குறை காரணமாக 50 மீட்டர் நீளத்திற்கு மட்டும் பணி மேற்கொள்ளப்படவில்லை.

வரும் நிதியாண்டில் மேற்கண்ட பணிக்கு மதிப்பீடு தயாரித்து நிர்வாக அனுமதி பெற்று பின்னர் பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திரு. ம. கமல்

அத்திப்பட்டு சென்னை மேல்நிலை பள்ளியில் சுமார் 800 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அப்பள்ளியில் தன்னார்வ தொண்டு அமைப்பின் வாயிலாக நிறுவப்பட்டிருந்த குடிநீர் சுத்திகரிப்பு (RO) தற்போது பழுதடைந்துள்ளதால், மாணவர்களின் குடிநீர் தேவைக்காக கட்டண அடிப்படையில் குடிநீர் பெற்று தரப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாணவர்களின் நலன் கருதி புதிய குடிநீர் சுத்திகரிப்பு (RO) ஒன்றை மாநகராட்சி சார்பில் அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், கடந்த ஆட்சி காலத்தில் சிறப்பு திட்டங்கள் துறையின் மூலம் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் நிறைவடையும் நிலையில் உள்ளது. அக் கட்டிடங்கள் எப்போது திறந்து மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

கட்டிட பணிகள் முழுமையாக நிறைவடைந்தவுடன் அவை திறந்து வைக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

திரு. ம. கமல்

நன்றி.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. இராஜேஸ்வரி ஸ்ரீதர் அவர்கள், வார்டு – 58.

திருமதி. இராஜேஸ்வரி ஸ்ரீதர்

வங்க கடல் கரையோரம் துயில் கொண்டிருக்கும் எங்கள் தமிழின தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, தளபதி அவர்களை

வணங்கி, கழக இளைஞரணி செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான மாண்புமிகு திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வணங்கி, சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மாண்புமிகு திரு. பி. கே. சேகர்பாபு அவர்களையும் வணங்கி, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர், சக மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி

மண்டலம்–5, வார்டு 58ல் உள்ள கண்ணப்பர் திடல் விளையாட்டு மைதானத்தை SDAT அவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது என்கிற தகவல் வருகிறது. இந்த கண்ணப்பர் திடல் விளையாட்டு மைதானத்தை பெரியமேடு, சூளை, வேப்பேரி மற்றும் புளியந்தோப்பு ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்கள் தினமும் நடைபயிற்சி செய்து வருகிறார்கள். அதே போல், இளைஞர்கள், மாணவர்கள் பெருமளவில் கிரிக்கெட் மற்றும் கால்பந்து விளையாட்டு பயிற்சி மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த விளையாட்டு மைதானத்தை SDAT அவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம் என்று பொதுமக்கள் என்னிடம் கோரிக்கை மனு அளித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த விளையாட்டு மைதானத்தை SDAT அவர்களிடம் ஒப்படைக்காமல் நம் மாநகராட்சியே தொடர்ந்து இதை பராமரிக்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்
பதில்

மண்டலம்–5, வார்டு–58ல் கண்ணப்பர் திடலில் உள்ள விளையாட்டு திடலை தற்போது SDAT–க்கு வழங்கப்படாமல் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது

திருமதி. இராஜேஸ்வரி ஸ்ரீதர்

மாண்புமிகு மேயர் அவர்களே, தனியார் வானிலை ஆய்வுகளின்படி, நடப்பு ஆண்டில் 'எல் நினோ' (El Nino) சூழல் காரணமாக, கடந்த 1997 மற்றும் 2015–ஆம் ஆண்டுகளை விட மிக அதிக அளவில் பெருமழை பொழிய வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரின் மொத்த மழைநீர் வடிகால்வாயின் நீளம் 3,014 கி.மீ. ஆகும். இவை அனைத்தும் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக ஒரு முறையும், பருவமழை தொடங்கிய பிறகு டிசம்பர் மாதத்தில் ஒரு முறையும் என முழுமையாக தூர் வாரப்பட வேண்டும். இப்பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள தேவையான முழுமையான நிதியை அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மேலும், மாநகராட்சி ஒப்பந்ததாரர்களுக்கு சுமார் 2,000 கோடி ரூபாய்க்கும் மேல் நிலுவை தொகை உள்ளது. மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி இதுவரையில் விடுவிக்கப்படாமல் உள்ளது. மாநகராட்சியின் சார்பாகவும், மாமன்ற உறுப்பினர்களின் நலன் சார்ந்தும் மாண்புமிகு துறைமுகம் சட்டமன்ற தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது சட்டமன்றத்தில் பேசியுள்ளார். இதனை நமது சென்னை மாநகராட்சி மாமன்றத்திலும் நான் முறைப்படி பதிவு செய்ய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி க. அஸ்வினி கருணா அவர்கள், வார்டு எண் – 196.

திருமதி க. அஸ்வினி கருணா

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், வருகை புரிந்துள்ள அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இனிய காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி

196வது வார்டில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியைகள் நீண்ட காலமாக பணி செய்வதால் அவர்களின் பணியிட மாறுதல் நடைபெறுமா?

மாண்புமிகு மேயர்

பதில்

பள்ளி கல்வி துறையின், அரசாணை எண்.176, நாள்.17.12.2021ன்படி, 2021 ஆம் ஆண்டிற்கு பிறகு புதிதாக பணி நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் ஓரே பணியிடத்தில் 8 ஆண்டுகள் பணிபுரிந்த நிலையில், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து பொது மாறுதல் கலந்தாய்வுக்கு முன்னர் பணி மாறுதல் அளிக்கப்படும்.

மேற்கண்ட அரசாணையின்படி, பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்கு 8 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் கட்டாயமாக பணி மாறுதல் வழங்கப்படும். இவ்வரசாணையை தவிர்த்து பணிமாறுதல் தொடர்பான வேறு எந்த அரசாணையும் பெறப்படவில்லை.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்படுகிறது.

இந்த கலந்தாய்வில் விருப்பம் உள்ள தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு பணி மாறுதல் பெற்று கொள்கின்றனர் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திருமதி க. அஸ்வினி கருணா

நன்றி.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, நேரமில்லா நேரம். முதலில் மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. எஸ்.வி. ரவிச்சந்திரன் அவர்கள், வார்டுகுழு தலைவர், மண்டலம் – 14 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.184.

திரு. ராஜா அன்பழகன் (குறுக்கீடு)

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென்றும், மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் சரிவர மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் கேட்டு கொள்கிறேன்.

(பாரதீய ஜனதா கட்சியை சார்ந்த திருமதி உமா ஆனந்தன், மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.134, அ.இ.அ.தி.மு.க. கட்சியை சார்ந்த திரு. த. சத்தியநாதன், மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.145, விடுதலை சிறுத்தைகள் கட்சியை சார்ந்த திருமதி சாந்தி என்கிற யாழினி, மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.135 இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி சார்ந்த திரு.இர. ஜெயராமன், மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.4, மனித நேய மக்கள் கட்சியை சார்ந்த திரு.ல. நவீன், மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.55 ஆகியோர் எழுந்து நின்று கொண்டு மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியினை உடனடியாக விடுவிக்க வேண்டுமென்று கேட்டு கொண்டனர்)

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென்பது அனைத்து கட்சியினை சார்ந்த மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையாகும்.

மாண்புமிகு மேயர்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டுமென்று அனைத்து கட்சியினரும் இத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்ததற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. த. சத்தியநாதன், மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.145

கடந்த நான்கரை ஆண்டுகளில் சிறப்பான முறையில் மக்கள் திட்டங்களுக்கு உடனடியாக தீர்வு கண்ட மாண்புமிகு மேயர்

அவர்களுக்கு 145வது வார்டு பொதுமக்கள் சார்பாக நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

145வது வார்டில் நமக்கு நாமே திட்டத்தில் திருமண மண்டபம் கட்டும் பணியினை மேற்கொள்ள தனி நபர் ஒருவர் முன் வந்துள்ளார். எனவே, இதற்குண்டான மாநகராட்சி பங்கீட்டு நிதியான ரூபாய் 25.00 இலட்சம் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். மேலும், திருமண மண்டபம் கட்டுவதற்கு இடையூறாக உள்ள Transformer மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு மேயர்

திரு. எஸ்.வி. ரவிச்சந்திரன், வார்டுகுழு தலைவர், மண்டலம்–14 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.184.

திரு. எஸ்.வி. ரவிச்சந்திரன்

தளபதியார், மாண்புமிகு சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் மற்றும் கழக இளைஞரணி செயலாளர், முன்னாள் அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்.

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள்

வார்டு 187, 188: ரூ.1000 கோடி நிதியில் ஒரே நேரத்தில் 4 சிறப்பு பணிகள் (மழைநீர் வடிகால்வாய், பாதாள சாக்கடை, சாலை அமைப்பு, குடிநீர் குழாய் இணைப்பு) அமைக்கப்பட்டது.

வார்டு 182, 183: நீண்டநாள் கனவாகிய பாதாள சாக்கடை திட்டம், மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

வார்டு 190, 191: நிதி ஒதுக்கீடு செய்து பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால்வாய், குடிநீர் குழாய் இணைப்பு, சாலை அமைக்கப்பட்டது.

வார்டு 184: ரூ.10 கோடி நிதியில் மாடுகள்காப்பகம் அமைக்கப்பட்டது.

கல்லுக்குட்டை: 1000 தெரு விளக்குகள், ரூ.40 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய், சாலை அமைத்து தரப்பட்டது.

வார்டு 184, 185: பாதாள சாக்கடை, குடிநீர் குழாய் இணைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நிதி ஒதுக்கீடு கோரிக்கை

மண்டலம் 14–இல் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நிதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்ட பணிகளுக்காக ரூ.2000 கோடி ரூபாய் சிறப்பு நிதி வழங்க அரசிடம் கோரிக்கை வைக்க வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

சாலை பணிகள்

கல்லுக்குட்டை பகுதியில் 4 சாலைகளில் WMM "Wet Mix Macadam பணி மேற்கொள்ளப்பட்டு, BM/BC "Bituminous Macadam" மற்றும் "Bituminous Concrete பணி மேற்கொள்ளப்படாமல் சாலை பணிகள் முடிக்கப்படாமல் உள்ளன. நடவடிக்கை தேவை.

சுமார் 60 சாலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளன. ஆனால் நிதி இல்லை என்று கூறப்படுகிறது. கல்லுக்குட்டை பகுதியில் சாலை அமைத்து தர வேண்டும்.

நெடுஞ்சாலை துறை பணிகள்

வார்டு 182: எம்.ஜி.ஆர். சாலையில் சிறிய மழைக்கும் மழைநீர் தேக்கம் ஏற்படுகிறது. நெடுஞ்சாலை துறையினரால், மழைநீர் வடிகால்வாய் கட்டப்படவில்லை; கால்வாய்களில் தூர் வாரும் பராமரிப்பு பணிகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.

எம்.ஜி.ஆர். சாலையை பெருநகர சென்னை மாநகராட்சி பராமரிப்பில் எடுத்து பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

வார்டு 187: மடிப்பாக்கம் சபரி சாலை பகுதியில் மழைநீர் வடிகால்வாய் இல்லை; பராமரிப்பு பணிகள், தூர் வாருதல் பணிகள்

மேற்கொள்வதில்லை. சிறிய மழைக்கும் பிரதான சாலைகளில் மழைநீர் தேக்கம் ஏற்படுகிறது.

பாலங்கள் தொடர்பான பிரச்சினைகள்

OMR–ECR– நீலாங்கரை பாண்டியன் சாலையிலிருந்து வெங்கடேஸ்வரா நகர், வீரமணி நகரிலிருந்து கந்தன்சாவடி சாலை இணைப்பு, கொட்டிவாக்கம் இளங்கோ நகர்–OMR ஆகிய மூன்று பாலங்கள் மோசமான நிலையில் உள்ளன. போக்குவரத்து நெரிசல், பாதுகாப்பற்ற நிலை. உடனடி நடவடிக்கை எடுத்து பாலங்களை கட்டி தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நெடுஞ்சாலை துறையினை அணுகி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆணையர் அவர்களை கேட்டு கொள்கிறேன்.

திரு. நே. சிற்றரசு (குறுக்கீடு)

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி துறை அதிகாரிகள் மற்றும் ஊடக நண்பர்களுக்கு வணக்கம்.

தீர்மானத்தின் நோக்கம்

ஆளுங்கட்சி தலைவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவை சென்னை மாநகர மக்களின் ஒட்டுமொத்த குரலாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்தை நடத்த போதுமான நிதி தேவை.

மழை வெள்ள கால நடவடிக்கைகள்

கடந்த ஆட்சியில் முன்னாள் முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோர் அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டங்கள் நடத்தி மழை

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதை போன்று, இந்த ஆண்டும் மழைநீர் வடிகால்வாய்களில் தூர்வாரும் பணி உடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி உடன் விடுவிக்கப்பட வேண்டும்.

சாலை பணிகள்

மழைக்காலத்திற்கு முன் மோசமான நிலையில் உள்ள சாலைகளில் ஒட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒப்பந்ததாரர்களுக்கு மைனஸ் −27%, −32%, −34% என பணி நேர் செய்யப்பட்டுள்ளன. மைனஸில் பணி நேர் செய்யப்பட்டுள்ள காரணத்தினால், பணி சரிவர நடைபெறுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும்.

மழைநீர் வடிகால்வாய் தூர் வாரும் பணிக்கு PMC (Project Management Consultancy) அவசியம். சாலை ஒட்டு பணிகளுக்குண்டான நிதி முறையாக செலவழிக்கப்படுவதை கண்காணிக்க வேண்டும். அரசிடம் பேசி போதுமான நிதியினை பெற வேண்டும். போதுமான நிதி ஒதுக்கீடு செய்து, பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. என். சந்திரன், வார்டுகுழு தலைவர், மண்டலம்−12 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.166.

திரு. என். சந்திரன்

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், ஆளுங்கட்சி தலைவர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு

தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஊடக துறையினை சார்ந்த நண்பர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் வணக்கம்.

கடந்த ஆட்சியின் சாதனைகள்

பாதாள சாக்கடை திட்டம்: RCC–Pipe சேதமடைந்ததால், ரூ.122 கோடி நிதியில் புதிய திட்டம் அறிவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று அவை முடிகின்ற தருவாயில் உள்ளன.

மழைநீர் வடிகால்வாய்: 156 சாலைகள், சற்றொப்ப 38,806 மீட்டர் நீளத்தில் ரூ.111.24 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது.

திருமண மண்டபங்கள்:

- வார்டு 160 – ரூ.18.6 கோடி மதிப்பீட்டிலும்;
- வார்டு 163 – ரூ.10.00 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதுமட்டுமல்லாமல், பழவந்தாங்கல் சுரங்கப்பாதை – 5 ஆவது பிரதான சாலை ஆகியவற்றினை இணைக்கின்ற சாலைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணி துவங்கப்படாமல் உள்ளது. தகுந்த நடவடிக்கை தேவை.

நிதி பள்ளி மேம்பாட்டு பணிக்கு மாண்புமிகு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், நமக்கு நாமே திட்டம் வாயிலாக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும், மொத்தம் ரூ.2 கோடி ரூபாய் அளவிற்கான திட்டத்திற்கு பூஜைகள் போட்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

மண்டல அலுவலகம்: ரூ.32.74 கோடி நிதியில் பணிகள் நடைபெற்று வருகிறது.

எனவே, அனைத்து பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

திறந்தவெளி நிலம் தொடர்பான பிரச்சினைகள்

வார்டு 167 – SIP காலனி, ரூ.35.00 கோடி மதிப்பிலான திறந்தவெளி நிலத்திற்கு தவறுதலாக சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு, பின்னர் மண்டல அலுவலர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அவை ரத்து செய்யப்பட்டன. எனவே, அனைத்து மண்டலங்களிலும்

உள்ள திறந்தவெளி நிலங்களை கணக்கெடுத்து மாநகராட்சியின் பெயருக்கு அவை பெயர் மாற்றம் செய்ய வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

திறந்தவெளி நிலத்தில் தனி நபர் ஒருவரின் பெயரில் சொத்து வரி மதிப்பீடு செய்யப்பட்டதாக மாமன்ற உறுப்பினர் அவர்கள் மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறார். தனியார் பராமரிப்பில் உள்ள திறந்தவெளி நிலங்களை மாநகராட்சி பெயரில் பெயர் மாற்றம் செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேயர்

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு OSR Land (Open Space Reservation Land) ஒப்படைக்கப்படாமல் உள்ளது. மண்டல வாரியாக கணக்கெடுப்பு எடுத்து நிலங்களை மாநகராட்சி வசம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மண்டலம் 11 மற்றும் 13–ல் பொதுமக்களின் கோரிக்கைக்கு மாநகராட்சி வகைப்பாட்டில் இடம் இல்லை. OSR Lands மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டால், பல்வேறு பொது பணிகள் மேற்கொள்ள முடியும். OSR நிலங்களை மாநகராட்சி வசம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மண்டல வாரியாக கணக்கெடுப்பு செய்து, நிலங்களை மாநகராட்சி பெயரில் பதிவு செய்ய வேண்டும். OSR Lands மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டால், பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பல திட்டங்கள் மேற்கொள்ளலாம். இதற்கான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

தனியார் பராமரிப்பில் உள்ள OSR நிலங்களை மாநகராட்சி பெயரில் பெயர் மாற்றம் செய்ய வேண்டும்.

திரு. என். சந்திரன்

சுகாதார துறை

காந்தி மருத்துவமனையில் டயாலிசிஸ் சென்டர் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. பணிகள் முடிவுற்றும், மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படவில்லை. விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படும்.

திரு.என். சந்திரன்

கல்வி துறை:

- மதனந்தபுரம் – ரூ.3 கோடி பள்ளிக் கட்டிடம்.
- முகலிவாக்கம் – ரூ.2.8 கோடி பள்ளிக் கட்டிடம்.
- வார்டு 166 – புதிய பள்ளிக் கட்டிடம் – கட்டி கொடுக்கப்பட்டன.

பள்ளி மேம்பாட்டு பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். சுகாதார துறை, கல்வி துறை பணிகள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து உரையினை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய நியமனக்குழு உறுப்பினர் திரு.சொ. வேலு, /மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.78.

திரு. சொ. வேலு

பத்திரிகையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள். அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் கருப்பு வண்ண உடை அணிந்து வந்துள்ளோம்.

ஆளுங்கட்சி தலைவர் அவர்களும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களும் முன் மொழிந்ததை அனைத்து மன்ற உறுப்பினர்கள் சார்பாக வழி மொழிகிறேன்.

திராவிட அறிவின் தந்தை பெரியார், தெளிந்த சிந்தனையில் பேரறிஞர் அண்ணா, நவீன தமிழ்நாட்டினை படைத்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோர் உழைப்பில் தனக்கு நிகர் எவரும் இல்லை என்று வாழ்ந்து வரும் வரலாறு திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என நான்கு திசைகளின் மையமாக திகழும் அரசியல் நேர்மையும், கூர்மையும் கொண்ட கழக போராளி மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குவதோடு, திரு.பி. கே. சேகர்பாபு அவர்களையும் வணங்குகிறேன்.

அம்மா உணவகம்

அம்மா உணவகங்களில், குறைந்த விலையில் காலை, மதியம், இரவு உணவு வழங்கப்படுகிறது. ரூ.5/–க்கு டீ, பால், காபி வழங்க வேண்டும். அம்மா உணவகங்களில் இதற்கான வசதிகள் மற்றும் பணியாளர்கள் உள்ளனர்.

விக்டோரியா மஹால்

ரிப்பன் மாளிகை அருகிலுள்ள விக்டோரியா மஹால் முகப்பில் பெயர் பலகை வைக்க வேண்டும்.

மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை

மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை தகவல் தொடர்பிற்காக தொகுதிக்கு ஒரு மேற்பார்வையாளரை அதாவது அவர் நிலைக்குழு தலைவராக இருக்கலாம் அல்லது வார்டுகுழு தலைவராகவும் இருக்கலாம். எனவே, தொகுதிக்கு ஒரு மேற்பார்வையாளரை மாநகராட்சி நியமனம் செய்ய வேண்டும்.

2026 ஆகஸ்ட் 11 அன்று, பெருநகர சென்னை மாநகராட்சி (GCC) திருத்தப்பட்ட சொத்து வரி அறிவிப்புகளை வெளியிட்டது. மாமன்றத்தில் இதற்கான கோப்பு ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. பின்னர், இவை மூன்று நாட்களில் திரும்ப பெறப்பட்டது – தெளிவுபடுத்த வேண்டும்.

ரூ.700 கோடி அளவில் சொத்து வரி நிலுவை தொகை வசூலிக்கப்படவில்லை. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் வருவதற்காக Red Form முறை நடைமுறைப்படுத்த அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தும் அவை நடைமுறைக்கு வரவில்லை.

கோயில் நிலங்களில் உள்ள குடியிருப்புகளுக்கு சொத்து வரி மதிப்பீடு செய்யப்படவில்லை. எனவே, கோயில் நிலங்களில் உள்ள குடியிருப்புகளுக்கு சொத்து வதி மதிப்பீடு செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வார்டு 78ல் 1500 சதுர அடி நிலம் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மீட்டெடுக்கப்பட்டு அலுவலகம் கட்டப்பட்டது. இதே போன்று, மாநகராட்சிக்கு சொந்தமான பல நிலங்கள் ஆக்கிரமிப்பில் உள்ளன. இவற்றை மீட்டெடுக்க நிலம் மற்றும் உடைமை துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னை மெட்ரோ வாட்டர், சாலை வெட்டு பணிகளுக்கான தொகையினை, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தவில்லை.

ஆணையர்

This was not a tax hike but a correction of **under-assessed properties** using **GIS mapping and satellite data**. Property owners were given 30 **days to appeal** revised assessments.

தற்போது, பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சாலை வெட்டு பணிகளுக்கான தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தவில்லை என தெரிவித்தீர்கள். வட சென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மெட்ரோ வாட்டர் மேற்கொண்ட பணிகள் தொய்வில்லாமல் நடைபெற வேண்டும் என்கிற நோக்கத்தில், *Anticipation of approval* அடிப்படையில் அந்தப் பணிகளை செய்ய சொல்லி இருக்கிறார்கள். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திலிருந்து சாலை வெட்டு கட்டணம் வழங்கப்பட வேண்டும். கிட்டத்தட்ட ரூ. 3500 கோடிக்கு மேல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் பணம் இல்லாத காரணத்தினால்,

மெட்ரோ வாட்டர், மாநகராட்சிக்கு சாலை வெட்டு கட்டண பணத்தை செலுத்தவில்லை. மக்கள் பணி தொய்வில்லாமல் நடைபெற வேண்டும் என்பதால், மாநகராட்சி அந்தப் பணிகளை அனுமதித்துள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திலிருந்து அந்தப் பணத்தை விரைவில் பெற்று மாநகராட்சிக்கு ஒப்படைக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

திரு.சொ. வேலு

நன்றி. மாநகராட்சியில் நிதி நெருக்கடி இருப்பதால் வர வேண்டிய வரவுகள் குறித்து கேட்டேன்.

செயற்பொறியாளர் பதவி உயர்வு

96 உதவி செயற் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. 26 பேர் பணியில் சேரவில்லை. பணி மூப்பு பட்டியலில் விகிதாச்சாரம் பின்பற்றப்படவில்லையா?

96 உதவி செயற்பொறியாளர் காலி பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். மழைக்காலம் நெருங்கி வருகின்ற காரணத்தினால், உதவி செயற் பொறியாளர் காலி பணியிடம் நிரப்பப்பட வேண்டும். Class III & IV பணியாளர்களுக்கான பதவி உயர்வு எப்போது வழங்கப்படும்?

மழலையர் பள்ளி ஆசிரியர்கள் / ஆயாக்களுக்கு ஊதிய உயர்வு

9.7.2026 அன்று மாவட்ட ஆட்சியர் ஊதிய உயர்வு ஆணை பிறப்பித்தார். Arrears தொகை வழங்கப்பட வேண்டும். ஆனால், இன்னும் மழலையர் பள்ளி ஆசிரியர்கள் / ஆயாக்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை.

ரூ.556/- ஊதியம் பெற்று வந்து Attender-களுக்கு 26 நாட்களுக்கு ரூ.14,406/- என 11 மாத காலமும், ரூ.411/- ஊதியம் பெற்று வந்து ஆயாக்களுக்கு 10,600/- என வழங்கப்பட்டதை

Attender - ரூ.823/- ஊதியம் எனவும், ஆயாக்களுக்கு - ரூ.767/- எனவும் ஊதிய உயர்வு அளித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார். அது நிலுவையில் உள்ளது. 1.4.2026 முதல் Arrears வழங்கப்பட வேண்டும். 50 குழந்தைகளுக்கு ஒரு ஆயா என்கிற

முறையை மாற்றி, 30 குழந்தைகளுக்கு ஒரு ஆயா என நிர்ணயம் செய்ய வேண்டும்.

தூய்மை பணியாளர்கள்

கடந்த ஆட்சியில், 1200 தூய்மை பணியாளர்கள் NULM பணியாளர்களாக தொடர அனுமதி அளிக்கப்பட்டது. எனவே, NULM தூய்மை பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

Blue Flag Programme

மெரினா கடற்கரையில் ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் Blue Flag Programme அமல்படுத்தப்பட்டது. மூங்கில் அமைப்புகள் பராமரிப்பில் குறைபாடு உள்ளது. நேப்பியர் பாலம் அருகே கழிவு நீர் கலப்பதால் சான்று பெற தடை என்று சொல்லப்படுகிறது. அதற்கு ஏன் இந்த இடத்தினை தேர்வு செய்தீர்கள். மக்கள் பணம் விரயம். Blue Flag Certificate பெற முயற்சி மேற்கொள்ள வேண்டும். இத் திட்டம் கைவிடப்படுமா அல்லது தொடருமா?

மாண்புமிகு மேயர்

முதல் கட்டம், இரண்டாம் கட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மணல் பகுதிகளை பயன்படுத்தலாம்; கடல் நீர் பகுதிக்கு CRZ Clearance இல்லை. Blue Flag Certificate பெறுவதில் கூவம் கழிவுநீர் தடையாக உள்ளது.

ஆணையர்

சான்றிதழ் தன்மை: Blue Flag Programme என்பது Non–Governmental International Certification ஆகும்.

முதற்கட்ட பணிகள் (2022–2023):

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் ஆதரவுடன், பெருநகர சென்னை மாநகராட்சி இணைந்து **30 ஏக்கர் நிலப்பரப்பில் உட்கட்டமைப்பு பணிகள்** மேற்கொண்டது. இவை தற்போது **மக்கள் பயன்பாட்டில்** உள்ளன. கூவம் ஆற்றின் கழிவுநீர் கடலில் கலப்பதால், அந்தக் கடற்கரை பகுதி **குளிப்பதற்கு தகுதியானதா** என்கிற கேள்வியை ஆய்வு குழு எழுப்பியுள்ளது.

தீர்வு:

கழிவு நீர் கலப்பு தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டால், Blue Flag Certificate வழங்கப்படும். **கழிவுநீர் கலப்பு தடுப்பு நடவடிக்கை** மேற்கொண்டால், குளிப்பதற்கான பகுதியும் சான்றிதழில் சேர்க்கப்படும். இல்லையெனில், அந்தப் particular பகுதியை தவிர்த்து, Blue Flag பிற Certification வழங்கப்படும். இது தான் தற்போதைய நிலைமையாகும்.

திரு.சொ. வேலு

இவை மக்களின் பயன்பாட்டில் உள்ளது உண்மை தான். எனவே, Blue Flag Certificate பெற முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

பணியாளர்களின் மருத்துவ காப்பீடு பிரச்சினை

பணியாளர்களுக்கான மருத்துவ காப்பீட்டை பெருநகர சென்னை மாநகராட்சி தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து, பணியாளர்களுக்கான மருத்துவ காப்பீடு நடைமுறையில் உள்ளது. சில மாதங்களுக்கு EMI செலுத்தப்படாததால், ஒரு தொழிலாளியின் மனைவிக்கு ஏற்பட்ட மாரடைப்பு சிகிச்சைக்கான செலவுகள் Reimbursement ஆக கிடைக்கவில்லை.

மாண்புமிகு மேயர்

தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு கொள்கிறேன்.

PMC – சாலை மற்றும் வடிகால்வாய் பணிகள்

PMC ஆய்வில், டிப்ளமோ படித்தவர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். வார்டு 78 – டி.கே. மௌலி தெரு, குட்டி தெரு, சொக்கலிங்கம் தெரு – சாலை அமைத்த ஒரே நாளில் பழுதடைந்த விட்டது. PMC தான் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். மீண்டும் இந்தச் சாலை அமைத்து தரப்படவில்லை.

மதிப்பிற்குரிய துணை மேயர்:

PMC–னால் கண்காணிக்கப்பட்ட, நடைபாதை பணிகளும் ஆறு மாதத்தில் பழுதடைந்துள்ளன. இதனால், மாநகராட்சிக்கு பெரும் நிதி இழப்பு ஏற்படுகிறது. எனவே, PMC முறையை நீக்கி, மாநகராட்சி பொறியாளர்கள் அல்லது ஓய்வு பெற்ற தலைமை பொறியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து இந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு மேயர்

நல்ல நோக்கத்தில் PMC கொண்டு வந்திருந்தாலும், நடைமுறையில் டிப்ளமோ படித்தவர்கள் ஆய்வு செய்வதால் தரம் குறைகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி பொறியாளர்களின் மூலமாக குழு அமைத்து கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆணையர்

ADB, Kfw, Asia Bank போன்ற சர்வதேச வங்கிகளின் நிதி உதவியுடன் திட்டங்கள் நடைபெறுவதால், **PMC அவசியம்**. இது அவர்களுடைய **Pre–condition** ஆகும். PMC இல்லாமல் அவர்கள் நிதி உதவியினை வழங்க இயலாது.

KPC Check:

KPC (Key Project Check) செய்வதற்கு PMC தேவைப்படுகிறது.

சிறு பணிகள்:

சாலை அமைத்தல், பூங்கா அமைத்தல் போன்ற சிறு பணிகளுக்கு PMC தவிர்க்கலாம். இத்தகைய பணிகளுக்கு மாநகராட்சி பொறியாளர்களே போதுமானவர்கள்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு PMC இருக்கலாம்.

மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு PMC தேவையில்லை. இதுவே பணிகள் நிலைக்குழு தலைவர் அவர்களின் கருத்தும், எங்களின் **நிலைப்பாடும்** ஆகும்.

திரு.சொ. வேலு

Premiere நிறுவணம் – கட்டிட இடிபாடுகள்

Premiere நிறுவணம் கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு வார்டிலும் உள்ள **12 முதல் 15 சாலை பணியாளர்கள்** கட்டிட கழிவுகளை சந்துக்களில் இருந்து எடுத்து வைக்கிறார்கள். அதையே Premiere நிறுவணம் எடுத்து சென்று மாநகராட்சி ஒதுக்கீடு செய்த இடத்தில் கொட்டுகிறது. இதனால் இருவரும் ஒரே பணியை மேற்கொள்கிறார்கள். சாலைப் பணியாளர்களுக்கு ரூ. 35,000/– முதல் ரூ.50,000/– வரை மாத ஊதியம் வழங்கப்படுகிறது; 12 பணியாளர்களுக்கான மொத்த மாத ஊதியம் ரூ. 5,00,000/– ஆகும். இதற்கு பிறகும் Premiere நிறுவனத்தாருக்கு தனி தொகை அளிக்கப்படுகிறது. நிரந்தர தூய்மை பணியாளர்கள் தற்போது சாலை பணியாளர்களாக பணிபுரிந்து வருவதால், சாலை பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சாலை பணியாளர்கள் குறைவாக இருந்த காலத்தில், கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணிக்காக Premiere நிறுவனத்திற்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டது. தற்போது சாலை பணியாளர்கள் அதிகமாக உள்ள காரணத்தினால்,

Premiere நிறுவனத்தினரை இந்தப் பணியில் ஈடுபடுத்துவதன் அவசியம் என்ன?

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாநகராட்சியில் நிதி பற்றாக்குறை இருக்கும் போது தேவையற்ற செலவினங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது தான் மாமன்ற உறுப்பினரின் கருத்தாகும்.

திரு.சொ. வேலு

Completion Certificate இல்லாத கட்டிடங்களுக்கு மெட்ரோ வாட்டர் இணைப்பு வழங்கப்படுகிறது. காவலர், வாகனங்களில் வந்து சாலை வெட்டு பணிக்கு பணம் பெறுகிறார்கள். இரவு நேரங்களில் உணவகங்களில் தூய்மை பணியாளர்கள் கழிவுகளை அகற்றி பணம் பெறுகின்றனர். இதற்கான வீடியோ ஆதாரம் என்னிடம் உள்ளது.

மழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

ஒவ்வொரு நிதியாண்டிலும் பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் முன்னாள் துணை முதலைமைச்சர் அவர்களின் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு சேவை துறை அதிகாரிகளுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு இந்தக் கூட்டம் நடைபெறவில்லை. மாநகராட்சி சார்பில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பருவமழைக்குள் இரண்டு சுற்றுகள் முடிக்கப்படும்.

பருவமழை முன்னெச்சரிக்கை நிதி

ஆணையர்

- வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு தூர் வாரும் பணிகளுக்காக ரூ.22.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைமுறையில் உள்ளது.

- உடனடி சாலை மேம்பாட்டு பணிகளுக்காக ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது டெண்டர் நிலையில் உள்ளது.
- கூடுதல் தூர் வாரும் பணிகளுக்காக அதிக திறன் கொண்ட இயந்திரங்களுக்கு ரூ.4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அவசர அவசிய பணிகளுக்காக ஒவ்வொரு வார்டிற்கும் ரூ.5 லட்சம் வீதம் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அதிக திறன் கொண்ட மோட்டார் பம்ப்கள் வாடகைக்கு ரூ.26.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இதர பணிகளுக்காக ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மொத்தம் ரூ.100 கோடி பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையில் உள்ளது. சில பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் நடைபெற்று வருகின்றன.
- மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் கூட்டம் நடைபெற்றது.
- 15.06.2026, 03.07.2026, 16.07.2026, 18.08.2026 ஆகிய தேதிகளில் மாண்புமிகு அமைச்சர்கள், தலைமை செயலர், கூடுதல் தலைமை செயலர் தலைமையில் கூட்டங்கள் நடைபெற்றன.
- 29.08.2026 மற்றும் 31.08.2026 அன்று கூடுதல் கூட்டங்கள் நடைபெற உள்ளன.
- வாரந்தோறும் என்னுடைய தலைமையில் இதற்கான கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மதிப்பிற்குரிய துணை மேயர்

உள்ளாட்சி பிரதிநிதிகளாகிய மாமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

உள்ளாட்சி பிரதிநிதிகளாகிய மாமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும்.

திரு.சொ. வேலு

வடகிழக்கு பருவமழைக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் மாமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு மேயர்

வடகிழக்கு பருவமழைக்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் சுற்றறிக்கைகள் மூலமாக வார்டுகுழு தலைவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

திரு. வே. ராஜன்

உள்ளாட்சி பிரதிநிதிகளின் கருத்து முக்கியம்; வார்டு பிரச்சனைகள் எங்களுக்கு தான் தெரியும்.

வார்டு பராமரிப்பு நிதி ரூ.5.00 லட்சம் போதுமானதா என்பதை மன்ற உறுப்பினர்களிடம் கருத்து கேட்க வேண்டும்.

திரு. சொ. வேலு

ஒரு வார்டிற்கு 5 சாலை பணியாளர்கள் சில்ட் அகற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே நிரந்தர சாலை பணியாளர்கள் சில்ட் அகற்றுகின்ற பணியினை மேற்கொண்டு வருகின்றனர். மறுபடியும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு பணி நேர் செய்யப்பட்டு, ஒப்பந்ததாரரும் அதே பணியை செய்து வருகிறார்கள்.

சில்ட் அகற்றப்பட்ட பைகளை சாலை பணியாளர்களே அகற்றி வருகின்றனர். ஒப்பந்ததாரர் ஆட்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படுவதில்லை. சாலை பணியாளர்கள், நிரந்தர சாலை பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மூவருக்கும் தனித்தனியாக ஊதியம் வழங்கப்படுவதால் பண விரயம் தான் ஏற்படுகிறது.

ராம்கி நிறுவன பணியாளர்கள் சில்ட் எடுப்பதற்காக ஒப்பந்தம் செய்துள்ளீர்களா என அறிய விரும்புகிறேன்? 10.09.2026 அன்று மண்டலம் 6, வார்டு 65, அஞ்சுகம் நகரில் ராம்கி நிறுவனத்தின் இரு பெண் தொழிலாளர்கள் மழைநீர் வடிகால்வாயிலிருந்து சில்ட் எடுக்கும் பணியில் ஈடுபட்டதாகவும், 19.08.2026 அன்று வார்டு 75, மண்டலம் 6, டிரஸ்ட் ஸ்கொயர் தெருவில் சுத்தமாக இருக்கின்ற புதிய குப்பை

தொட்டியை சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டதாகவும், இதற்கான புகைப்படங்கள் வீடுயோ சமூக வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேயர்

ஒப்பந்ததாரர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட வேண்டும்.

திரு. சொ. வேலு

வீடுகளில் உற்பத்தியாகும் குப்பைகளை **பிரித்து சேகரிக்கும் நடைமுறையை ஊக்குவிக்கும்** நோக்கில், **உலர் குப்பை (Non–biodegradable waste)** தனியாக சேகரிக்க **சிறப்பு பைகள்** வழங்கும் திட்டம் **பெருநகர சென்னை மாநகராட்சி** தெற்கு வட்டார அலுவலகத்தில் நடைபெற்றது. மாமன்ற உறுப்பினர், வார்டுகுழு தலைவர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் அழைக்கப்படவில்லை என்பதை பதிவு செய்ய விரும்புகிறேன்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. வே. ராஜன்

அனைவருக்கும் வணக்கம். மாநகராட்சி நிதி நெருக்கடியில் உள்ளது நன்றாக புரிகிறது.

145வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.த. சந்தியநாதன் அவர்கள் முன் வைத்த கோரிக்கையினை நிறைவேற்றி தர வேண்டும். அதாவது, ஒரு தனியார் நிறுவனம் 145வது வார்டில், ரூ.6.00 கோடி செலவில் திருமண மண்டபம் கட்டி கொடுக்க முன் வந்துள்ளது. மாநகராட்சியால் செலுத்த வேண்டியது 4% தொகை – ரூ.26.00 இலட்சம் மட்டுமே. 3 மாதங்களாக கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது; தொகை விடுவிக்கப்பட வேண்டும். மின் வாரியத்திற்கு பணம் செலுத்தப்படாவிட்டால் அந்த நிறுவனம் திட்டத்திலிருந்து விலகும் அபாயம் உள்ளது. மாண்புமிகு மேயர், ஆணையர் ஆகியோரின் கவனத்திற்கு – அப்பகுதி மக்களின் நலனிற்காக நிதி விடுவிக்க வேண்டும்.

மெட்ரோ வாட்டர் குடிநீரில் மலம் கலந்து வருகிறது. இப் பிரச்சனை 15 மண்டலங்களிலும் உள்ளது. Lab Report–ல், e–coli பாக்டீரியா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, மஞ்சள் காமாலை, காலரா, டைஃபாயிடு, போலியோ, வயிற்று போக்கு, காய்ச்சல் போன்ற தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. சுகாதார துறை வாயிலாக அனைத்து பகுதிகளிலும் குடிநீர் பரிசோதனை செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேயர்

Lab Report–னை ஆணையரிடம் வழங்கவும். மெட்ரோ வாட்டரின் கவனத்திற்கு எடுத்து சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து, மரியாதைக்குரிய 5வது வார்டுகுழு தலைவர் திரு. ப. ஸ்ரீராமுலு அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.54.

திரு. ப. ஸ்ரீராமுலு

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரை வணங்கி, சிறப்பானதொரு ஆட்சியை தன் ஆட்சி காலத்தில் தந்து மக்கள் மனதில் இடம் பிடித்திருக்கும் எங்கள் அன்பு தலைவர் அவர்களை வணங்கி, எங்கள் அன்பு அண்ணன் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்கி, மாவட்ட செயலாளர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்களையும் வணங்கி, மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

NULM தூய்மை பணியாளர்கள்

மண்டலம் 5 மற்றும் 6 ல் பணியாற்றிய 2149 NULM தூய்மை பணியாளர்களில், 1985 பேர் மண்டலம் 4 மற்றும் 8 ல் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள 164 On Duty பணியாளர்களுக்கு NULM பணி வழங்கப்படவில்லை. இவர்களின் குடும்ப வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு பணி வழங்க வேண்டும்.

2025–2026 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு, அவர்களால் பணி செய்து முடிக்கப்பட்டும், Agreement கையொப்பம் ஆகவில்லை மற்றும் Work Order வழங்கப்படவில்லை. தகுந்த நடவடிக்கை தேவை.

மண்டலம் 5ல் தேக்க நிலையில் உள்ள பணிகளை விரைந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு.வெ. பரிமளம் (குறுக்கீடு)

வார்டு 56ல் டிசம்பரில் இடிக்கப்பட்ட இரண்டு மாநகராட்சி அலுவலக கட்டிடத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் பணி ஆணை வழங்கப்படவில்லை. ஒரு ஆண்டாக வார்டு அலுவலகம் இல்லாமல் பணியாற்ற வேண்டிய நிலை உள்ளது.

2024–2025ஆம் ஆண்டு, மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் வருவாய் துறை சார்ந்த கட்டிட பணி மேற்கொள்ள வேண்டிய பணியில் ஒப்பந்தப்புள்ளி கோரியும், பணி ஆணை வழங்கப்படவில்லை.

(மாண்புமிகு மேயர் அவர்கள் இருக்கையில் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் அமர்தல்)

மதிப்பிற்குரிய துணை மேயர்

வட்டார துணை ஆணையர் அவர்கள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆணையர்

சரியான நிர்வாக நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்: Administrative Sanction, Financial Provision, ERP பதிவு, Tender Committee பரிசீலனை, LOA, Work Order ஆகியவை முறையாக பின்பற்றப்பட்டிருந்தால் மட்டுமே பில் தொகை செட்டில் செய்யப்படும். தற்போது அரசின் நிதி துறை குழு விரிவான தணிக்கை செய்து வருகிறது; அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. ஸ்ரீராமுலு

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி விடுவிக்கப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

பணிகளுக்கான மதிப்பீடுகளை தயார் செய்து வார்டு குழுவின் ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும்.

திரு. ப. ஸ்ரீராமுலு

அனைத்தும் முறைப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாண்புமிகு மேயர் அவர்களுக்கு மனு கொடுத்தால் தீர்வு காணப்படும்.

திருமதி. ஸ்ரீ இராஜேஸ்வரி

பணிகள் முடிக்கப்பட்ட இனங்களுக்குண்டான பணி ஆணைகள் வழங்கப்படவில்லை.

மதிப்பிற்குரிய துணை மேயர்

வட்டார துணை ஆணையர் அவர்கள் ஆய்வு செய்து இதற்கு தீர்வு காண வேண்டும்.

அடுத்து, திருமதி. ச. மேனகா, மாமன்ற உறுப்பினர், வார்டு எண். 197 அவர்கள்.

திருமதி. ச. மேனகா

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களுக்கு இனிய காலை வணக்கம்.

197வது வார்டு உத்தண்டி மற்றும் நைனார் குப்பம் பகுதிகளில் நிலத்தடி கிணற்று குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் மக்கள் கடும் அவதியுற்று வருகின்றனர். இந்த இணைப்பினை மீண்டும் வழங்கிட வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். இது தொடர்பாக மெட்ரோ வாட்டர் மேற்பார்வை பொறியாளர் அவர்களை சந்தித்தேன். இது தொடர்பாக கடந்த மாமன்ற கூட்டத்தில் தெரிவித்தும் எனக்கு பதில் வழங்கப்படவில்லை.

மதிப்பிற்குரிய துணை மேயர்

இது குடிநீர் வாரியம் தொடர்புடையதாக இருக்கின்ற காரணத்தினால், கடிதம் மூலமாக தெரிவிக்க வேண்டும். மேலாண்மை இயக்குநர் மெட்ரோ வாட்டர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த, மாத மன்ற கூட்டத்தில் இது தொடர்பாக பதில் வழங்கப்படும்.

திருமதி. ச. மேனகா

197வது வார்டு நைனார் குப்பம் – முத்தாளம்மன் கோயில் தெரு, தண்டுமாரியம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகளில் ஏற்பட்ட பள்ளங்களில் மெட்ரோ வாட்டர் குடிநீர் தேங்குவதால், குழந்தைகள், பெற்றோர்கள் பணிக்கு செல்லக்கூடிய மக்கள் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக கொசுக்களின் எண்ணிக்கை அதிகரித்து, டெங்கு, மலேரியா, தோல் நோய்கள் ஏற்படுகின்றன. தகுந்த நடவடிக்கை தேவை.

அக்கரை பிள்ளையார் கோயில் தெருவில் கழிவுநீர் மேலேறி சாலைகளில் வழிந்து செல்லும் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும்.

கொசு புகை பரப்பும் மூன்று இயந்திரங்கள் அடிக்கடி பழுதடைந்து, சுகாதார பணியாளர்கள் சிரமப்படுகின்றனர்; எனவே, இரண்டு Fogging இயந்திரங்கள் வழங்கப்பட வேண்டும்.

VGP லேஅவுட் பார்ட்–I கிணற்றில் உள்ள மோட்டார் அப்புறப்படுத்தப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது. இதற்கான காரணம் என்ன? இந்த மோட்டாரினை அகற்ற கூடாது என்பது எங்கள் பகுதி மக்களின் கோரிக்கையாகும்.

உத்தண்டி பகுதியில் பஜனை கோயில் தெரு, செங்கேணி அம்மன் கோயில் தெரு, கண்ணபிரான் கோயில் தெரு, சுந்தரவிநாயகர் கோயில் தெரு மற்றும் தாந்தோணி அம்மன் கோவில் பாதாள சாக்கடை பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகள் சேதமடைந்துள்ளன. மெட்ரோ வாட்டரிலிருந்து NOC பெறப்பட்டு உடன் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ECR சாலை PVR திரையரங்கம் பின்புறம் அமைந்துள்ள MGR நகர் சாலையில், மகாவீரர் தெரு உள்ளது. மகாவீரர் தெருவிலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக பாதாள சாக்கடை பணிகள் நடைபெற வேண்டும். ஆனால், அவ்வாறு நடைபெறாமல், தலைகீழாக ஊர் பொதுமக்கள் வசிக்கும் தாந்தோன்றி அம்மன் கோயில் வழியாக பஜனை கோவில் தெருவில் உள்ள கிணற்றில் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற உள்ளன. இதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். காரணம் – பேரிடர் காலங்களில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், ஊர்ப்பகுதிகளில் உள்ள தெருக்களில் வழங்கப்பட்ட அனைத்து இணைப்புகளும் முழுமையாக பாதிப்படையும் என மக்கள் அச்சம் அடைகின்றனர். எனவே, மகாவீரர் தெருவில் வழங்கப்பட இருக்கும் பாதாள சாக்கடை இணைப்பினை நேரடியாக அப்பகுதியில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் இணைக்குமாறு தங்களை கேட்டு கொள்கிறேன்.

உத்தண்டி மற்றும் குடுமிடியாண்டிதோப்பு பகுதிகளில் உள்ள இரண்டு சுனாமி கட்டிடங்களை சமுதாய நலக்கூடமாக மாற்ற வேண்டும். விரைவில் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

தங்களால் முன் வைக்கப்பட்டுள்ள பிரச்சனைகள் குடிநீர்வாரியத்துடன் தொடர்புடையவை; இது தொடர்பாக தனியாக கடிதம் அளிக்க வேண்டும். மெட்ரோ வாட்டர் மேலாண்மை இயக்குநர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும்.

திருமதி. ச. மேனகா

குடுமியாண்டி தோப்பு பகுதியில் உள்ள அம்மா உணவகம் பழுதடைந்துள்ளது; தரைத்தளம் சேதம், சுவர்களில் நீர்க்கசிவு, அலமாரிகள் பழுதடைந்துள்ளன. இரண்டு அம்மா உணவகங்களிலும் பெயர் பலகைகள் சேதமடைந்துள்ளன. உரிய நடவடிக்கை தேவை.

197–ஆவது வார்டு பகுதிகளில் உள்ள பள்ளிகள், அரசு உயர்நிலைப்பள்ளிகள், வார்டு அலுவலகம், அங்கன்வாடி மையங்கள், மினி கிளீனிக் ஆகியவற்றிற்கு தண்ணீர் வசதி இல்லை. நடவடிக்கை தேவை.

Street Board–க்கான மதிப்பீடு வார்டுகுழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு வருடம் ஆகிறது. வைக்கப்பட்ட பல Street Board–கள் துரு பிடித்துள்ளன, Sticker கிழிக்கப்பட்டுள்ளன, சில இடங்களில் Board இல்லை. தகுந்த நடவடிக்கை தேவை.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான கல்வெட்டுகளில் மாமன்ற உறுப்பினர்களின் புகைப்படம் வைக்க வேண்டும்.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி விடுவிக்கப்பட வேண்டும்.

மாமன்ற உறுப்பினர்களுக்கு கோப்புகளில் கையொப்பம் இடும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

பூங்கா பராமரிப்பு பணிகள் சரியாக நடைபெறவில்லை. தகுந்த நடவடிக்கை தேவை.

அம்மா உணவகங்களை சீர்படுத்தி அங்கு Tea ரூ.5 க்கு வழங்கப்பட வேண்டும்.

திரு. த. விஸ்வநாதன் (குறுக்கீடு)

அம்மா உணவகங்களில் தற்போது அரிசி, பருப்பு இல்லாமல் வெறும் மாவு மட்டுமே உள்ளது. எனவே, அம்மா உணவகங்களில் தனி கவனம் செலுத்த வேண்டும்.

பாலவாக்கம் கிழக்கு கடற்கரை சாலையில் நடைபாதையில் பேவர் பிளாக் பதிக்கும் பணி விரைந்து முடித்து தர வேண்டும்.

நிதி நெருக்கடி நிலவும் இக்காலகட்டத்தில், மாநகராட்சியில் 55 *Enforcement* வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவது தேவையா என்பதை ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும்.

(மாண்புமிகு மேயர் அவர்கள் மீண்டும் இருக்கையில் அமர்தல்)

மாண்புமிகு மேயர்

Enforcement வாகனங்கள் ஆரம்ப காலகட்டத்தில் பலன் அளித்தன. ஆனால், தற்போது நிதி நெருக்கடி உள்ள சூழ்நிலையில், மண்டலத்திற்கு 1 என்ற வீதத்தில் 15 வாகனங்கள் போதுமானது என்பது என்னுடைய கருத்தாகும்.

திரு. பெ. மணிமாறன், மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.177 (குறுக்கீடு)

177 ஆவது வார்டில் பூங்கா மற்றும் Nurse Quarters இருந்த இடத்தில் நடைபாதை அமைத்து தர வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் வெண்கல சிலை அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. ரூ.1.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், பூஜை போடப்பட்டு 5 மாதங்கள் கடந்தும் பணிகள் தொடங்கப்படவில்லை. தகுந்த நடவடிக்கை தேவை.

மாண்புமிகு மேயர்

தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் முடிக்கப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

திரு. கே. ஏழுமலை (குறுக்கீடு)

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதற்கு பிறகு, உள்ளாட்சி தேர்தல் நடத்தப்பட்டு, 25.10.1996 ஆம் ஆண்டிலிருந்து சென்னை மாநகராட்சியில் மாமன்ற கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. அ. ரேவதி அவர்கள், வார்டு எண். 124.

திருமதி. அ. ரேவதி

எங்கள் முத்தமிழறிஞர் எங்கள் நெஞ்சங்களில் எல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

இம்மாமன்றத்தில் இவ்வளவு பெண் மாமன்ற உறுப்பினர்களை அமர வைத்து அழகு பார்த்து கொண்டிருக்கும் அன்பிற்கு ய எங்கள் கழக தலைவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் தளபதி திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், எங்களையெல்லாம் வழிநடத்தி கொண்டு செல்லும் எதிர்க்கட்சி தலைவர் பாசத்திற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், எங்களுக்கெல்லாம் பாதுகாப்பாகவும், உறுதுணையாகவும் இருக்கும் மாண்புமிகு தூத்துக்குடி மக்களவை உறுப்பினரும், திராவிட முன்னேற்ற கழக துணை பொது செயலாளருமான அன்பிற்குரிய திருமதி கனிமொழி அவர்களுக்கும் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திரு. மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், மயிலாப்பூரில் எங்களையெல்லாம் வழிநடத்தி கொண்டிருக்கும் எங்கள் மாவட்ட செயலாளர் மரியாதைக்குரிய திரு. தா. வேலு அவர்களுக்கும், மாண்புமிகு தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்க பாண்டியன் அவர்களுக்கும், இந்த மாமன்றத்திலே எங்களையெல்லாம் வழிநடத்தி கொண்டிருக்கும் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும் 9வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு. எஸ். மதன்மோகன் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் மரியாதைக்குரிய திரு.ந. இராமலிங்கம் அவர்களுக்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு தலைவர் மரியாதைக்குரிய திருமதி சர்பஜெயாதாஸ் அவர்களுக்கும், இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்கும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் அனைவருக்கும், எங்கள் மயிலாப்பூர் மகளிர் அணி சகோதரிகளுக்கும் என்னுடைய

நெஞ்சம் நிறைந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

125 ஆவது வார்டு மெரீனாவில் – சிந்தனை சிற்பி சிங்கார வேலர் சாலையில் வாழும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, காந்தி சிலையிலிருந்து பட்டினப்பாக்கம் வரையிலான பகுதியை மீன்பிடி பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஏகாம்பரம் பிள்ளை தெரு, முனுசாமி பிள்ளை தெரு ஆகிய இடங்களில் உள்ள குடிசைமாற்று வாரிய வீடுகள் காலி செய்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. புதிய குடியிருப்பு பணிகள் தாமதமாக நடைபெற்று வருகின்றன. இம் மக்களின் ஏழ்மையான நிலையை கருத்தில் கொண்டு, விரைவில் இக் கட்டுமான பணிகளை முடித்து வீடுகளை ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டு கொள்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் என்றும் பொதுமக்களின் மனதில் நிலைத்திருக்கும் என்பதை தெரிவித்து பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

மாமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கைகள் ஆணையர் அவர்களிடம் கலந்தாலோசனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி. அ. ரேவதி

நன்றி.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. ராணி அவர்கள், வார்டு எண். 102.

திருமதி. கே. ராணி

மறைந்த மாவீரர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டு மக்களின் பாதுகாவலர், முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். முன்னாள் துணை முதலமைச்சர் மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், மகளிர் அணியின் போர்ப்படை தளபதி திருமதி கனிமொழி, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் திரு. நே. சிற்றரசு, முன்னாள் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். கே. மோகன், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், என்னுடைய அரசியல் ஆசான் திரு. ந. இராமலிங்கம் மற்றும் சக மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு என்னுடைய வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

நான்கரை ஆண்டுகளாக 102வது வார்டில் மாமன்ற உறுப்பினராக நான் பணியாற்றி திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முக்கிய திட்டங்கள்:

காலை உணவு திட்டம், புதுமை பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் இத் திட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நான் மாமன்ற உறுப்பினராக பதவியேற்ற போது மழை வெள்ளத்தால் மக்கள் பாதிக்கப்பட்டனர். T, Q, W, P, J, I, N, A, F Block–களில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டு மக்களின் துயரம் தீர்க்கப்பட்டது.

வேலங்காடு மயானபூமி நவீனமயமாக்கப்பட்டது.

போகன்வில்லா பூங்காவில் நடைபாதைகள், நீரூற்றுகள், பசுமையான செடிகள், நவீன கழிப்பிடம் அமைக்கப்பட்டு முதியவர்கள் இளைப்பாற வசதிகள் செய்து தரப்பட்டன. இப்பணிகள் திராவிட மாடல் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக அனைத்து அதிகாரிகளுக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

வேலங்காடு மயானபூமி மற்றும் போகன்வில்லா பூங்கா புத்தம் புது பொலிவுடன் அமைவதற்கு மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை

மேயர் மற்றும் அதிகாரிகளுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

கிரசண்ட் கிரவுண்டில் மின் விளக்குகள் இல்லாத காரணத்தினால், நகரமைப்பு நிலைக்குழு கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டு, பின்னர் சோடியம் விளக்குகள் பொருத்தப்பட்டன.

பி.பி தோட்டம், எம்.எம் காலனி, "O" பிளாக், எம்.ப்ளாக் ஆகிய இடங்களில் புதிய சாலைகள் அமைக்கப்பட்டன; தெரு மின் விளக்குகள் அதிக அளவில் பொருத்தப்பட்டன.

பல வருடங்களாக நிலுவையில் இருந்த பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன.

அம்மா அரங்கம் பொது பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. ஆனால், தற்போது இவை பராமரிப்பின்றி உள்ளது.

போகன்வில்லா பூங்கா நவீனமயமாக்கப்பட்டாலும், தற்போது பராமரிப்பு இல்லாமல் கழிப்பறைகள் சுத்தம் செய்யப்படாமல் உள்ளது.

பி.பி தோட்டம் Skywalk எதிரில் இருந்த Bin அகற்றப்பட வேண்டுமென்று நீண்ட காலமாக கோரிக்கை வைக்கப்பட்ட போதிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால், தற்போது அந்த Bin அகற்றப்பட்டு PH சாலையில் மாற்றி வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேயர்

பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க குப்பை தொட்டியினை இட மாற்றம் செய்யலாம்.

மாமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்பதால், அவர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக சுற்றறிக்கை ஒன்றினை அனுப்புமாறு கேட்டு கொள்கிறேன்.

திருமதி. கே. ராணி

போகன்வில்லா பூங்கா Non-Vending Zone என அறிவிக்கப்பட்டு கடைகள் அகற்றப்பட்டு ஏழைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். 102வது வார்டில் vending zone கிடையாது. ஆனால், 3வது அவென்யூவில் குடியிருப்புகள் Commercial ஆக மாற்றப்பட்டு ஹோட்டல்களாக இயங்கி வருகின்றன. ஆனால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு மேயர்

பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து வரி மதிப்பீடு செய்யும் போது, கட்டிடங்கள் *Residential* (வசிப்பிடம்) அல்லது *Commercial* (வணிகம்/வருமானம் ஈட்டும் இடம்) என வகைப்படுத்தப்படுகின்றன. வகைப்பாடு *உபயோகத்தின் அடிப்படையில்* தீர்மானிக்கப்படுகிறது, உதவி வருவாய் அலுவலர்கள் ஆய்வு செய்து வீடுகள் வணிகமாக பயன்படுத்தப்பட்டால், Commercial ஆக மதிப்பீடு செய்ய வேண்டும்.

திருமதி. கே. ராணி

அண்ணாநகர் 102வது வார்டு பகுதியில் குடிநீர் மாசடைதல் மற்றும் மின்சார விபத்து தொடர்பான பிரச்சனைகள் உள்ளன. TANGEDCO கவன குறைவின் காரணமாக, 59 வயது பெண் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் 102வது வார்டு பகுதியில் நடைபெற்றுள்ளது. எனவே, இத் துறைகள் முறையாக பணியாற்ற தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி விடுவிக்கப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி தொடர்பாக சிறப்பு தீர்மானம் இம்மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாண்புமிகு மேயர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இது தொடர்பாக கடிதம் எழுதியுள்ளார்.

திருமதி. கே. ராணி

ஓட்டேரி நல்லா தூர் வாரப்படவில்லை. மழைக்காலத்தில் மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, ஓட்டேரி நல்லா கால்வாய் தூர் வார உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

ஒப்பந்த விதிகளின்படி தூர் வாரப்படவில்லை என இது தொடர்பாக நிறைய புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, தலைமை பொறியாளர் தலைமையில் குழு அமைத்து ஆய்வு செய்ய வேண்டும்.

திருமதி. கே. ராணி

அதிக மழைக்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், தூர் வாரும் பணி விரைந்து நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சி பணிகளில், மாமன்ற உறுப்பினர்களுக்கு, அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

மாமன்ற உறுப்பினர் கேட்டு கொண்டதற்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு திறக்கப்பட்ட புதிய சமுதாய நல கூடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்து அவை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.ஆ. இராஜேந்திரன் அவர்கள், வார்டு எண். 16.

திரு. ஆ. இராஜேந்திரன்

வங்க கடலோரம் துயில் கொண்டிருக்கும் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, தமிழ்நாட்டை முதல் மாநிலமாக உருவாக்கி, பொருளாதாரத்தை முன்னேற்றி தந்த முன்னாள் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களை வணங்கி இளைஞர்களின் எழுச்சி நாயகன், தமிழ்நாட்டின் மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்கி, என்னை இந்த மாமன்றத்தில் பேச வைத்த அரசியல் பண்பாளர் என் அரசியல் ஆசான் அன்பு அண்ணன் மாதவரம் திரு. எஸ். சுதர்சனம் அவர்களை வணங்கி, மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், சக மாமன்ற உறுப்பினர்கள், அரசு துறை அதிகாரிகள் மற்றும் பத்திரிகை துறை நண்பர்கள் ஆகிய

அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

வார்டு–16, சடையன்குப்பம், ஆண்டார்குப்பம், காமராஜபுரம், பர்மாநகர், எலந்தனூர் ஆகிய இடங்களில் அங்கன்வாடி கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆனால், இவை திறக்கப்படவில்லை. இவற்றை திறக்க வேண்டு .

எலந்தனூரில் உள் விளையாட்டரங்கம் கட்டப்பட்டு திறக்கப்பட்டது.

பர்மாநகரில் உள் விளையாட்டரங்க பணி முடிவுற்றும் 6 மாதங்களாக திறக்கப்படவில்லை. அவை திறக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பர்மாநகர், சடையன்குப்பம், கன்னியன் பேட்டை–2 ஆகிய இடங்களில் விளையாட்டு திடல்கள் பணிகள் மந்தநிலையில் நடைபெற்று வருகின்றன. அவற்றை துரிதப்படுத்த வேண்டும்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் ரூ.58.33 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள கடப்பாக்கம் ஏரி புனரமைப்பு மற்றும் அழகுபடுத்தும் பணிகள் இதுவரை முழுமையாக நடைபெறவில்லை. குறிப்பாக, ஏரியின் உபரி நீர் வெளியேற்றத்திற்கு தேவையான கலங்கல் (கதவு அமைப்புடன்) உடனடியாக கட்டி அமைக்க வேண்டும். மேலும், கலங்கலிலிருந்து 300 மீட்டர் நீளத்தில் மழைநீர் வடிகால்வாய் அமைத்து தர வேண்டும்.

பாதாள சாக்கடை பணிகள் முடிவடைந்த பகுதிகளில் உடனடியாக சாலை பணிகள் மேற்கொள்ள வேண்டும். சில சாலைகளுக்கு தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. எனவே, சாலை சீரமைப்பு பணி உடன் மேற்கொள்ள வேண்டும்.

குளக்கரை கிராமத்தில் மழைக்காலத்தில் விச்சூரிலிருந்து வருகின்ற மழைநீர் இங்கு வந்து தேங்கி நிற்கிறது. தற்பொழுது மோட்டர் மூலம் இம் மழைநீர் அகற்றப்பட்டு வருகிறது. எனவே, இங்கு 200 மீட்டர் அளவிற்கு மழைநீர் வடிகால்வாய் அமைத்து தர வேண்டும்.

22 புதிய தார் சாலைகள் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், தார் விலை உயர்வின் காரணமாக, அந்த ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டது. மறு மதிப்பீடு செய்து விரைவில் தார் சாலை அமைத்து தர வேண்டும்.

129வது பிளாக்கில் விளையாட்டு திடல் அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 7 மாதங்கள் ஆகின்றன. எனவே, உடனடியாக பணிகள் தொடங்க வேண்டும்.

16வது வார்டில் வெள்ள நிவாரண மையம் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பின் ரத்து செய்யப்பட்டது. மறுமதிப்பீடு செய்து அமைத்து தர வேண்டும்.

ஆண்டார் குப்பத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் விற்பனை குறைவாக உள்ளதால், மணலிபுதூர் நகருக்கு இந்த அம்மா உணவகத்தை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாலை வெட்டுகளால் பாதிக்கப்பட்ட சாலைகளில் தார் சாலை அமைத்து தர வேண்டும்.

16வது வார்டு சடையான்குப்பம் மற்றும் பர்மாநகரில் உள்ள பழைய சமுதாய நலக்கூடத்தை இடித்து புதிய சமுதாய நல கூடம் அமைத்து தர வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் அனைத்தும் வார்டு குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையருக்கு கடிதம் மூலமாகவும் மேற்கண்ட கோரிக்கைகளை வழங்கியுள்ளேன். எனவே, இக் கோரிக்கைகளை நிறைவேற்றி தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். நன்றி.

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. கே. கண்ணன் அவர்கள், வார்டு எண். 138.

திரு. கே. கண்ணன்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

வார்டு–138–ல் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். கால்வாயின் சுற்றுச்சுவர் சீரமைப்பு பணிகள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டதன் பயனாக, அப்பகுதி பொதுமக்கள் தற்போது பாதுகாப்பான சூழலில் வாழ்ந்து வருகிறார்கள்.

அதே போன்று, பாரதிதாசன் காலனியில் நீண்டகாலமாக நிலவி வந்த மழைநீர் தேக்க பிரச்சினைக்கு தீர்வாக மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டதுடன், சாலையின் உயரமும் உயர்த்தப்பட்டதன் மூலம் அப்பகுதி மக்கள் அச்சமின்றி வாழும் நிலை உருவாகியுள்ளது.

மேலும், சென்னை மாநகரம் முழுவதும் பெருமளவில் மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டதன் விளைவாக, மழை மற்றும் வெள்ள நீர் மேலாண்மையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து மண்டலங்களிலும் ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு, மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகள் பெறப்பட்டு வந்தன. தற்போதும் அதே போன்று மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளை பெற்று மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உதவி பொறியாளர்கள் மாற்றப்பட்டுள்ள நிலையில், ஒவ்வொரு வார்டிலும் மழைநீர் தேங்கும் இடங்கள், பம்புகள் அமைக்க வேண்டிய பகுதிகள் உள்ளிட்ட உள்ளூர் தகவல்கள் அப்பகுதி மாமன்ற உறுப்பினர்களுக்கே நன்கு தெரியும் என்பதால், அவர்களின் கருத்துக்களை அதிகாரிகள் கட்டாயம் கருத்தில் கொள்ள வேண்டும்.

மக்கள் நலன் சார்ந்த பணிகளில் அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டாலே பொதுமக்களின் பாதுகாப்பும் நலனும் உறுதி செய்யப்படும். மேலும், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர் மற்றும் வார்டுகுழு தலைவர்களுடன் ஆலோசித்து பணிகளை மேற்கொள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வார்டு–138–ல் அமைந்துள்ள அஞ்சுகம் நகர் பூங்காவிற்கான 3 கிரவுண்ட் OSR நிலம் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியின் வசம் ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும் அந்நிலத்திற்குள் தனியார் தரப்பினரின் பொருட்கள் இன்னும் அகற்றப்படாத நிலையில் உள்ளது. எனவே, அந்நிலத்தை முழுமையாக கையகப்படுத்தி, தேவையான சட்ட மற்றும் காவல்துறை உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றி, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், சாலை ஒட்டு பணிகளுக்காக வார்டுகளுக்கு ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பினும், மாநகராட்சி சாலை சீரமைப்பு பணிகளுக்கு பின்னர், குடிநீர் வாரியம் மற்றும் TANGEDCO மீண்டும் சாலைகளை தோண்டுவதால் சாலைகள் சேதமடையும் நிலை ஏற்படுகின்றன. எனவே, துறைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்தி சாலைகள் தரமான நிலையில் பராமரிக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

சாலை வெட்டு பணிகள் செப்டம்பர் மாதம் 15–ஆம் தேதிக்கு பின்னர் நிறுத்தி வைக்கப்படும்.

ஆணையர்

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், TANGEDCO மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) உள்ளிட்ட பல்வேறு துறைகள் சாலை வெட்டு பணிகளுக்காக டெபாசிட் தொகையாக சுமார் ரூ.120 கோடி செலுத்தியுள்ளது. அந்தத் தொகையிலிருந்து சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. கே. கண்ணன்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO) உயரழுத்த (HD) கேபிள் பதிக்கும் பணிகளின் போது மட்டுமே சாலை வெட்டு பணிகளுக்கான கட்டணத்தை செலுத்துகின்றன. TANGEDCO பிற பணிகளின் காரணமாக சாலைகள் சேதமடையும் சூழல்களில் அதற்கான செலவினை ஈடு செய்யும் நடைமுறை பின்பற்றப்படுவதில்லை.

ஆணையர்

அவ்வகையான சாலை சீரமைப்பு தேவைகளை கருத்தில் கொண்டே ரூ.15 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. கண்ணன்

மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாக பல்வேறு துறைகளால் மீண்டும் பள்ளங்கள் தோண்டப்படுவதால் சாலைகள் சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, சாலை வெட்டு பணிகள் தொடர்பாக அனைத்து துறைகளின் செயல்பாடுகளையும் உரிய முறையில் கண்காணித்து, ஒருங்கிணைப்புடன் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. ஆ. பிரியதர்ஷினி அவர்கள், வார்டு எண். 98.

திருமதி ஆ. பிரியதர்ஷினி

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர் அவர்களுக்கும், சக மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்.

அயனாவரம் சாலை பிரச்சனை

Torrant Gas பணிகள் காரணமாக சாலை மோசமான நிலையில் உள்ளது. இரவு நேரங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பள்ளங்கள் மூடப்படாமல் இருப்பதால் விபத்துக்கள் நடைபெறுகின்றன. மேடவாக்கம் சாலை டாங்க் – நியூ ஆவடி சாலை இணைப்பாக இருப்பதால் பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்பு. எனவே, உடனடியாக சாலை சீரமைப்பு செய்து தர வேண்டும்.

மாண்புமிகு மேயர்

பணி முடியும் வரை காத்திருக்காமல், முடிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்பு பணி மேற்கொள்ள வேண்டும்.

டோபிகானா EB இணைப்பு பிரச்சனை

2024 ஆகஸ்ட் மாதத்தில் திறக்கப்பட்ட டோபிகானாவிற்கு மின் இணைப்பு முறையாக வழங்கப்படவில்லை. தனிநபர் வீட்டில் இணைப்பு வழங்கப்பட்டதால், TANGEDCO Vigilance அதிகாரிகள் ரூ. 80,000 அபராதம் விதித்தனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக EB Reading எடுக்கப்படாததே இதற்கான காரணம். ரூ. 35,000/– மீண்டும் செலுத்துமாறு அழுத்தம்

கொடுத்து கொண்டிருக்கிறார்கள். Meter Reading எடுத்திருந்தால், முன்பாகவே பணம் செலுத்தப்பட்டிருக்கும்.

பம்பிங் ஸ்டேஷன் Drainage பிரச்சனை

திருவள்ளுவர் நகரில் கடந்த 5 ஆண்டுகளாக Drainage பிரச்சனைகள் தொடர்கின்றன. பம்பிங் ஸ்டேஷன் ஆழப்படுத்தல் அல்லது கிணறு அமைத்தல் அவசியம். முன்னாள் Area Engineer அனுமதி அளித்திருந்தார்; தற்போதைய Area Engineer பணிகளை நிறுத்தியுள்ளார். 15 தெருக்களில் Drainage பிரச்சனைகள் தொடர்கின்றன. தகுந்த நடவடிக்கை தேவை.

அயனாவரம் சாலை பணிகள்

மேட்டு தெரு அயனாவரம் சாலையில் மெட்ரோ வாட்டர் இணைப்பு வழங்கப்படுகிறது. இதற்காக சாலை வெட்டு மேற்கொள்ளப்படுகிறது. மெட்ரோ வாட்டர், ஒரு இடத்தில் 10 மீட்டர் அளவில் ஒரு இணைப்பு தர வேண்டும். அந்த இணைப்பினை அவர்கள் இதுவரை தரவில்லை. தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒட்டு பணிகள் சரியாக செய்யப்படாததால் சாலை பாதிப்பு அடைந்துள்ளது. TANGEDCO மற்றும் மெட்ரோ வாட்டர் இரு துறைகளும் எந்த ஒரு தகவலும் தராமல் சாலை வெட்டுக்களை மேற்கொள்கின்றனர்.

மழைநீர் வடிகால்வாய் பணிகள்

VP காலனி Extention பணி முடிக்கப்பட்டது.

NMK சாலை, சோமசுந்தரர் 1, 2 மற்றும் 3வது சாலை VP காலனி KH சாலை இணைப்பு பணிகள் நிலுவையில் உள்ளன.

Silt Catch Pit தூர் வாரும் பணிகள் முடிக்கப்படாமல் உள்ளன. விரைவில் தூர் வாரும் பணி தொடங்கப்படா விட்டால் மழைக்காலத்தில் பிரச்சனைகள் அதிகரிக்கும்.

பூங்கா மற்றும் அம்மா Mini Clinic சாவி பிரச்சனை

பூங்கா மற்றும் அம்மா Mini Clinic சாவிகள் தனி நபரிடம் உள்ளன.

லாக்மா நகரில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் இப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவை திறந்து வைக்கப்பட்டன. தூய்மை பணியாளர்கள் மற்றும் watchman–கள் இங்கு பணியிலமர்த்த வேண்டும்.

மாண்புமிகு மேயர்

பூங்கா மற்றும் அம்மா Mini Clinic சாவிகள், மாநகராட்சி உதவி பொறியாளர் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இது தொடர்பாக சுற்றறிக்கை ஒன்று அனுப்ப வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திருமதி ஆ. பிரியதர்ஷினி

ரிப்பன் மாளிகை மின் அலங்காரம்

அமெரிக்க நாட்டின் சுதந்திர தினத்தில், அவர்களின் தேசிய கொடி நிறத்தில் விளக்குகள் ரிப்பன் மாளிகையில் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

மாண்புமிகு மேயர்

பெருநகர சென்னை மாநகராட்சி Sister City ஒப்பந்தத்தின் கீழ் பல்வேறு கலாச்சார பரிமாற்றங்கள் நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

திருமதி ஆ. பிரியதர்ஷினி

சாலையோர வியாபாரிகளின் கடைகளுக்கு Notice வழங்காமல் கடைகள் உடைக்கப்பட்டன. மாற்று இடம் அறிவிக்கப்படவில்லை.
மண்டலம் 8ல் உள்ள கண்ணப்பர் திடல் விளையாட்டு மைதானத்தை SDAT அவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது என்கிற தகவல் வருகிறது.

மாண்புமிகு மேயர்

மண்டலம்–5, வார்டு–58ல் கண்ணப்பர் திடலில் உள்ள விளையாட்டு திடலை தற்போது SDAT–க்கு வழங்கப்படாமல் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்று தெரிவித்து கொள்கிறேன்.

திருமதி ஆ. பிரியதர்ஷினி

தூய்மை பணியாளர்கள் நிரந்தரம்

5 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் தூய்மை பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். கதிர்முருகன் அவர்கள், வார்டு எண். 170.

திரு. கே. ஆர். கதிர்முருகன்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, ஆணையர் அவர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களே, பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

170–வது வார்டு பொதுமக்களின் தேவைகளை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

வார்டு 170, கோட்டூர்புரம் பகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் கட்டியிருந்த பழைய குடியிருப்புகளில் 20 அங்கன்வாடி மையங்களும், ஒரு தடுப்பூசி மையமும் செயல்பட்டு வந்தன. தற்போது புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,800 குடியிருப்புகளில் ஒரு அங்கன்வாடி மையம் கூட இல்லாததால் குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் அடிப்படை சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் தடுப்பூசி சேவைகளை பெறுவதில் பெரும் சிரமம் அனுபவித்து வருகின்றனர். சுமார் 1,200 குடும்பங்கள் அக்குடியிருப்புகளில் வசித்து வருவதுடன், 250க்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளனர். அங்கன்வாடி மையம் அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட திறந்தவெளி நிலம் (OSR) தொடர்பாக மாநகராட்சியும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமும் இணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் 10 அங்கன்வாடி மையங்களை அமைப்பதற்கான கோரிக்கை ஏற்கனவே ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் (ICDS) மூலம் அனுப்பப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களின்

நலனை கருத்திற் கொண்டு அங்கன்வாடி மையங்கள் விரைவாக அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோட்டூர்புரம் புதிய குடியிருப்பு மற்றும் கோட்டூர் கார்டன் பகுதிகளுக்கு இடையே பாதுகாப்பான போக்குவரத்திற்காக கோட்டூர்புரம் பாலத்தின் கீழ் "யூ" (U) திருப்புமுனை அமைக்கும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும். இத் திட்டத்திற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என முன்பு தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்பகுதியில் சுமார் 5,800 குடும்பங்கள் வசித்து வருவதால் பொதுமக்கள் பாதுகாப்பாக சாலையை கடக்க முடியாத நிலை உள்ளது. கடந்த ஆறு மாதங்களில் அப்பகுதியில் ஆறு சாலை விபத்துகள் நிகழ்ந்து, இரண்டு பேர் உயிரிழந்ததுடன் நான்கு பேர் காயமடைந்துள்ளனர். பொதுமக்கள் பாதுகாப்பை முன்னிட்டு மழைக்காலத்திற்கு முன்போ அல்லது ஜனவரி மாதத்திற்குள் பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சர்தார் பட்டேல் சாலை தொடர்பான பிரச்சினை நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதாக முன்பு தெரிவிக்கப்பட்டிருந்தது. சி.எல்.ஆர்.ஐ. (CLRI) எதிர்புற பகுதிகளான ஸ்ரீராம் நகர், பள்ளிப்பட்டு, களிக்குன்றம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 3,000 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் பள்ளிகள் நான்கும், ஒரு கல்லூரியும் உள்ளதால் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பாக செல்ல பெரும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நெடுஞ்சாலை துறைக்கு கடிதம் அனுப்பி பாலம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வார்டு 170–ல் அமைந்துள்ள Infinity Park உள்விளையாட்டரங்கம் கடந்த பத்து ஆண்டுகளாக பொதுமக்கள் பயன்பாடின்றி உள்ளது. எனவே, உள்விளையாட்டரங்கத்தை விரைவாக சீரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வார்டு 170–ல் உள்ள பல தெரு விளக்குகள் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ளதால், சில இடங்களில் போதிய வெளிச்சம் இல்லாமல் இருக்கிறது. எனவே, பழைய மற்றும் மங்கலான விளக்குகளை மாற்றி புதிய தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2024–ஆம் ஆண்டு முன் வைக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், மாநகர மேயர் மற்றும் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மேற்கொண்ட முயற்சிகளால், 195 பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. அதற்காக நான் எனது பாராட்டினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

Infinity Park உள்விளையாட்டரங்கம் தொடர்பான கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மங்கலான தெரு விளக்குகள் மாற்றி தர வேண்டுமென்கிற கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. வி.வி. கிரிதரன் அவர்கள், வார்டு எண். 148.

திரு. வி.வி. கிரிதரன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன்.

வார்டு 148–ல் Multi Purpose Hall அமைப்பதற்காக கடந்த ஆண்டு ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் மூலதன நிதியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக பணி நிறைவேற்றப்படாமல் இருந்தன. பாலவிநாயகர் நகரில் மாநகராட்சிக்கு சொந்தமான 2,600 சதுர அடி பரப்பளவுடைய நியாயவிலை கடை வளாகத்தில் 750 சதுர அடியில் Health and Welness Centre அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இடத்தை Multi Purpose Hall–ஆக மேம்படுத்தி, தரைதளத்தில் அம்மா உணவகம் மற்றும் நியாயவிலை கடை, முதல் தளத்தில் உடற்பயிற்சி கூடம் அல்லது சமுதாய நல கூடம் அமைக்க முன்பே ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தும், நிதி பற்றாக்குறையால் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனவே, கடந்த ஆண்டு மற்றும் நடப்பாண்டிற்கான மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியை ஒருங்கிணைத்து அத்திட்டத்தை விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், TAISHA குடியிருப்பு வளாகத்தின் பின்பகுதியில் அமைந்துள்ள விருகம்பாக்கம் கால்வாயில் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் சுமார் 40 மீட்டர் நீளத்திற்கு கரைச்சுவர் உயர்த்தும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. கட்டுமான கழிவுகள் கால்வாயில் தேங்கியுள்ளதால் மழைநீர் தேக்கம் ஏற்பட்டு, சுற்றுப்பகுதி மற்றும் கிணறுகளின் நீர் மாசுபடும் அபாயம் நிலவி வருகிறது. எனவே, மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து, கால்வாயை முழுமையாக தூர் வார நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

148வது வார்டு பகுதியில் பயன்பாட்டில் உள்ள குடிநீர் பிரதான குழாய்கள் 2010–ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. குடிநீர் சேமிப்பு தொட்டி 2022 ஆம் ஆண்டு கட்டப்பட்டு 2024ஆம் ஆண்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. தற்போது சுமார் 800 வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

2015 ஆம் ஆண்டு பெருமழைக்கு பின்னர், 2016ஆம் ஆண்டு மழைநீர் வடிகால்வாய் பணிகளின் போது பல குடிநீர் குழாய்கள் சேதமடைந்ததால் அடிக்கடி கசிவுகள் ஏற்பட்டு சாலைகள் பாதிக்கப்படுகிறது. இதன் விளைவாக இறுதி பகுதிகளுக்கு போதிய அளவில் குடிநீர் சென்றடையாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பழைய பிரதான குழாய்களை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமீபத்தில் நான்கு வழி சாலையில் ஏற்பட்ட குடிநீர் கசிவை தொடர்ந்து நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாகி வருகிறார்கள்.

மேலும், வார்டு 145 மற்றும் 148 பகுதிகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரம் குறித்து பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வருகிறது. மண்டலம்–10 நிரப்புமிடத்திலிருந்து வழங்கப்படும் நீரிலும், குழாய் மற்றும் தொட்டி வழி விநியோகிக்கப்படும் நீரிலும் தரக்குறைபாடுகள் காணப்படுகிறது. R.C. level குறைவாகவும், குடிநீரில் E coli என்கிற கிருமி காணப்படுகிறது.

குடிநீர் சேமிப்பு தொட்டியின் மேற்பகுதியில் போதிய சுகாதார பராமரிப்பு மேற்கொள்ளப்படாதது குறித்து பலமுறை புகார்கள் அளிக்கப்பட்டுள்ளது. இவ்விவரம் வார்டுகுழு தலைவரின் கவனத்திற்கும்

கொண்டு செல்லப்பட்டுள்ளன. எனவே, குடிநீர் சேமிப்பு தொட்டிகளில் சுகாதார பராமரிப்பை முறையாக மேற்கொள்ள வேண்டும்.

வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

TAISHA குடியிருப்பு வழியாக சென்ற பழைய மழைநீர் வடிகால்வாய்கள் அங்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டதால் தற்போது தடைபட்டுள்ளன. மழைநீர் வெளியேற்றத்தை உறுதி செய்ய, அந்த நீரோட்டத்தை மாற்றி முக்கிய வடிகாலுடன் இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை கூட்டங்கள் போதுமான அளவில் நடைபெறவில்லை என மாமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு:

- 13.09.2025 அன்று குடியிருப்போர் நலச்சங்கங்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.
- 14.10.2025 அன்று மாமன்ற உறுப்பினர்களுடன் கூட்டம் நடைபெற்றது.
- 31.10.2025 அன்று இறுதி கூட்டம் நடைபெற்றது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.
- தலைமை செயலர் அவர்களின் தலைமையில் பருவமழை முன்னெச்சரிக்கை கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி விடுவிப்பு தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வாயிலாக கோரிக்கை வைக்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. சு. ஜீவன் அவர்கள், வார்டு எண். 35.

திரு. சு. ஜீவன்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நகரமைப்பு நிலைக்குழு தலைவர் திரு. தா. இளங்கோ (எ) தா. இளைய அருணா அவர்களே, 4வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு.உ. கணேசன் (எ) நேதாஜி உ. கணேசன் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, மாமன்றத்தில் வீற்றிருக்கின்ற சக மாமன்ற உறுப்பினர்களே, துறை சார்ந்த அதிகாரிகளே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறேன்.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி விடுவிக்க வேண்டும் என்பது தொடர்பாக முன் வைக்கப்பட்ட தீர்மானத்தை முழுமையாக வரவேற்று ஆதரிக்கிறேன். கடந்த நான்கரை ஆண்டுகளாக மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் மூலம் பல்வேறு வார்டுகளில் தேவையான மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, அந்நிதி மாமன்ற உறுப்பினர்களின் உரிமையாகும் என்றும் பதிவு செய்ய விரும்புகிறேன்.

16.2.2026 அன்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் (RTI) கீழ் சென்னை பத்திரிகையாளர் சங்கத்தின் ஒரு குழு வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், 18.2.2026 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியமும், பெருநகர சென்னை மாநகராட்சியும் மேற்கொண்ட ஆய்வில், கொடுங்கையூரில் குப்பைகளை எரித்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம்" Waste–to–Energy (WTE) பல்வேறு விதிமுறை மீறல்கள் கண்டறியப்பட்டதாகவும், அதன் காரணமாக அதன் செயல்பாடு தற்காலிகமாக நிறுத்த உத்தரவிடப்பட்டதாக ஒரு செய்தியினை படித்தேன்.

மாசு கட்டுப்பாட்டு வாரியம் வழங்கிய 48 வழிகாட்டுதல்களில் 45 வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படவில்லை, இதுவரை செயல்பட்ட இத்திட்டத்தால் சுற்றுவட்டார மக்களுக்கு ஏற்பட்டிருக்க கூடிய பாதிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

குப்பை கிடங்கிற்கு அருகில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரம், உடல்நலம் மற்றும் குழந்தைகளின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்.

50 டன் திறனுடைய கொடுங்கையூரில் குப்பைகளை எரித்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம்" Waste–to–Energy (WTE) பல்வேறு குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ள நிலையில், 2100 டன் திடக்கழிவிலிருந்து 31 மெகாவாட் குப்பைகளை எரித்து மின்சாரம் உற்பத்தி செய்யும் புதிய திட்டத்தின் சென்னை சுற்றுச்சூழல் விளைவுகள் குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மேலும், வட சென்னை மக்கள் ஏற்கனவே பல்வேறு சுற்றுச்சூழல் சுமைகளை சுமந்து வருகின்றனர், வளர்ச்சி என்கிற பெயரில் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் எதிர்கால தலைமுறையினரின் நலன் பாதிக்கப்பட கூடாது.

கொடுங்கையூரில் குப்பைகளை எரித்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம்" Waste–to–Energy (WTE) தொடர்பாக நான் ஆரம்பத்திலிருந்தே எழுப்பிய சந்தேகங்கள் தற்போது உண்மையென உறுதிபடுத்தப்பட்டுள்ளது. திட்டத்தை முன்னெடுப்பதற்கு முன், இந்தியா மற்றும் உலக நாடுகளில் செயல்பட்டு வரும் இதுபோன்ற திட்டங்களின் நடைமுறைகள் மற்றும் விளைவுகள் குறித்து தகுதியான நிபுணர்களின் ஆய்வு அறிக்கைகள் பொதுமக்கள் முன்னிலையில் வெளியிடப்பட வேண்டும். பொதுமக்களின் ஒப்புதலுடன் மட்டுமே இத்தகைய திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இறுதியாக, வட சென்னை மக்களின் நலனை கருத்தில் கொண்டு குப்பைகளை எரித்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம்" Waste–to–Energy (WTE) தொடர்பாக மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று வட சென்னை பொதுமக்களின் சார்பில் கோரிக்கையினை முன் வைக்கிறேன்.

திரு. வேணுகோபால் ஷர்மா பெயரிடல் தொடர்பாக

ஐயன் திருவள்ளுவருக்கு உருவம் தந்த ஓவிய பெருந்தகை திரு. வேணுகோபால் ஷர்மாவை கௌரவிக்க வேண்டும். பெயரிடப்படாத

மேம்பாலங்கள் அல்லது முக்கிய சாலைகளில் ஒன்றிற்கு ஓவிய பெருந்தகை வேணுகோபால் ஷர்மா அவர்களின் பெயரை சூட்ட வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட இடங்கள்:

- யானைக்கவுனி மேம்பாலம்
- வியாசர்பாடி மேம்பாலம்
- கணேசபுரம் புதிய மேம்பாலம்
- வால்டாக்ஸ் சாலை
- பேசின் சாலை
- தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை

குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

மூலக்கடை மேம்பாலம் கட்டுவதற்காக லெபனான்புரத்தில் வசித்து வரும் மக்களுக்கு துண்டிக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் மீண்டும் வழங்கப்படவில்லை. பல ஆண்டுகளாக மக்கள் கடுமையான குடிநீர் பற்றாக்குறையை சந்தித்து வருகின்றனர்.

கிருஷ்ணமூர்த்தி சாலை மற்றும் கண்ணதாசன் நகர் பகுதிகளில் பணிகள் முழுமையடையாமல் உள்ளது. ஒப்பந்ததாரர்களிடம் இப்பணிகளை ஒப்படைக்காமல், குடிநீர் வாரியம் தன் செயல்முறையை மாற்றி மக்கள் தேவைகளை அவர்களே நிறைவேற்ற வேண்டும்.

வள்ளுவன் குளம் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல் நீண்டகாலமாக உள்ளது. குள பகுதியை மீட்டு மாணவர்களுக்கான விளையாட்டு திடலாக மாற்றி தர வேண்டும்.

கல்வெட்டுகள்

35வது வார்டில் கட்டப்பட்ட பள்ளி கட்டிடங்கள் உள்ளிட்ட பல கட்டிடங்களுக்கு கல்வெட்டுகள் அமைக்கப்படவில்லை. உடனடியாக கல்வெட்டுகள் அமைத்து தர வேண்டும்.

திறக்கப்படாத கட்டிடங்கள்

பெரம்பூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மாண்புமிகு வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட ஆறு கட்டிடங்கள் திறக்கப்படாமல் உள்ளது. அவற்றை மக்கள் பயன்பாட்டிற்கு திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரிகள், வார்டு ஆய்வுகளுக்கு வரும் போது மாமன்ற உறுப்பினர்களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்க வேண்டும்.

முத்தமிழ் நகர் 8வது ப்ளாக்கில் சமுதாய நலக்கூடத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி தொடங்கப்படாமல் உள்ளன. உடனடியாக இப் பணி தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பழைய மார்க்கெட் இடித்து விட்டு மறு கட்டுமான பணி தொடங்கி அப் பணி மெதுவாக நடைபெற்று வருகிறது. பணி விரைந்து நடைபெற தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவேரி சாலை, North அவென்யூ, சவுத் அவென்யூ சிறுபாலங்கள், கட்டுமான பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இப் பணி விரைந்து தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு.ஏ. ஏழுமலை (குறுக்கீடு)

32வது வார்டில் பூங்காக்கள், LPG மயானங்கள், பள்ளி கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. ஆனால், கல்வெட்டு அமைக்கப்படவில்லை. கல்வெட்டு அமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. பரிதி இளம் சுருதி (குறுக்கீடு)

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே அனைவருக்கும் வணக்கம்.

35வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. சு. ஜீவன் அவர்கள் கொடுங்கையூரில் குப்பைகளை எரித்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம்" Waste–to–Energy (WTE) தொடர்பாக தனது கருத்தினை பதிவு செய்தார். அது வரவேற்கத்தக்க விஷயம்.

திரு. நேதாஜி (உ) கணேசன் (எ) நேதாஜி (உ) கணேசன் (குறுக்கீடு)

மாண்புமிகு மேயர் அவர்களே, 47வது வார்டு மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு பல்நோக்கு கட்டிடம் கட்டப்பட்டது.

ஆனால், இதுவரை கல்வெட்டு அமைக்கப்படவில்லை. கல்வெட்டு அமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருமதி.க. ஹேமலதா (குறுக்கீடு)

150 ஆவது வார்டில் கடந்த வருடம் 03.04.2025 அன்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் இராமச்சந்திரா பூங்காவில் 14 ஏக்கர் பரப்பளவில் ரூ. 17.00 கோடி செலவில் ஒரு பூங்கா திறந்து வைக்கப்பட்டது. ஆனால், இதுவரை கல்வெட்டு அமைக்கப்படவில்லை. கல்வெட்டு அமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

கல்வெட்டுகள் அமைப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மெத்தனமாக நடைபெறும் பணிகளை விரைவுபடுத்த இணை ஆணையர் (பணிகள்) மற்றும் வட்டார துணை ஆணையர் ஆகியோர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

கொடுங்கையூரில் குப்பைகளை எரித்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம்" Waste-to-Energy (WTE) சுற்று சூழல் பாதிப்பின் மூலமாக பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்கிற பட்சத்தில் அந்தத் திட்டத்தினை எதிர்க்க திராவிட முன்னேற்ற கழகம் தயங்காது என்பதனை பதிவு செய்ய விரும்புகிறேன். மத்திய மற்றும் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியங்களின் அனுமதி மற்றும் ஆய்வின் அடிப்படையிலேயே திட்டம் செயல்படுத்தப்படும்.

ஆணையர்

அடிக்கல் நாட்டியோர் மற்றும் திறந்து வைத்தோர் விவரங்களின் அடிப்படையில் கல்வெட்டுகள் அமைக்கப்படும்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ம. சாமுவேல்திரவியம் அவர்கள், வார்டு எண். 6.

திரு. ம. சாமுவேல் திரவியம்

பெருந்தலைவர் காமராஜர் அவர்களை வணங்கி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் எங்களுடைய தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்களையும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் திரு. மாணிக்கம் தாகூர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு மேயர் அவர்களையும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களையும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களையும், சக மாமன்ற உறுப்பினர்களையும், அதிகாரிகளையும் வணங்கி என் உரையை துவக்குகிறேன்.

இன்று காலை மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வரவேற்கிறேன். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 13 மாமன்ற உறுப்பினர்களும் இத் தீர்மானத்தில் முன் வைக்கப்பட்ட கருத்துகளை ஏற்று கொண்டு ஆதரிக்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை விரைவில் நேரில் சந்தித்து, தீர்மானத்தின் நோக்கத்திற்கிணங்க தொடர்புடைய நிதியை விரைவாக வழங்குமாறு வலியுறுத்தப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டு, அது வழிமொழியப்பட்டுள்ளது.

திரு. ம. சாமுவேல் திரவியம்

தற்பொழுது மாமன்ற கூட்டம் காலை 10.00 மணிக்கு தொடங்கப்பட்டாலும், மாலை 4.00 மணி வரை நீண்டு நடைபெறுகிறது. மாமன்ற உறுப்பினர்கள் மாமன்றத்தில் உரையாற்றுவதற்கான நேரத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். பேச ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரத்திற்குள் உரையாற்றும் நடைமுறையை கடைப்பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேயர்

தற்போது மாமன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் நலன் சார்ந்த தேவையான கருத்துகள் மற்றும் கோரிக்கைகளையே மாமன்றத்தில் முன் வைத்து வருகிறார்கள்.

திரு. ம. சாமுவேல் திரவியம்

மாமன்ற உறுப்பினர்கள் மாமன்றத்தில் உரையாற்றுவதற்கான நேரத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். பேச ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரத்திற்குள் உரையாற்றும் நடைமுறையை கடைப்பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

6ஆவது வார்டு தொடர்பான கோரிக்கை

6ஆவது வார்டில் முன் வைக்கப்பட்டுள்ள அனைத்து திட்ட வளர்ச்சி பணிகளும் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். மழைக்காலங்களில் மாநகரின் 200 வார்டுகளில் 6வது வார்டே மிகுந்த பாதிப்பை எதிர்கொள்கிறது. கடந்த மாமன்ற கூட்டத்தில் மழைநீர் வடிகால்வாய்கள் தூர் வாரும் கோரிக்கையினை முன் வைத்திருந்ததை நினைவூட்டுகிறேன். எனவே, 6ஆவது வார்டில் சிறப்பு கவனம் செலுத்தி, மழைநீர் வடிகால்வாய்கள் தூர்வாரும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி, அடுத்து மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர்.

திரு. ந. இராமலிங்கம்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, துணை ஆணையர்களே, வட்டார துணை ஆணையர் அவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, அனைத்து கட்சிகளின் தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, அனைத்து துறைகளின் அதிகாரி பெருமக்களே, பத்திரிகை மற்றும் ஊடக பிரிவு துறையை சார்ந்த நண்பர்களே உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு வெற்றியை தரவில்லை. திராவிட முன்னேற்ற கழகத்தினை எதிர்க்கட்சி வரிசையில்

அமர வைத்துள்ளார்கள். எதிர்கட்சி தலைவராக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சட்டமன்ற செயல்பாடுகளை கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களும் போற்றி பாராட்டி வருகிறார்கள். அந்த வகையில், கழகத்தை அடுத்த 50 ஆண்டுகளுக்கு வழிநடத்தி செல்ல கூடிய ஆற்றல்மிகு தலைவராகவும், தமிழ்நாட்டின் முகமாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இருப்பார் என்பதை எனது 60 ஆண்டு கால அரசியில் அனுபவத்தில் இருந்து தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, அனுதினமும் தமிழ் மக்களின் நலனில் அக்கரை கொண்டு செயல்பட்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டில் அரசு பணிகளில் 20 சதவிகிதம் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கொண்டு வந்த திட்டம், அப்போது செயல்படுத்த முடியாவிட்டாலும், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு எடுத்த முயற்சியின் காரணமாக கடந்த ஜனவரி மாதம் சட்டமன்ற பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், அரசு பணியில் இருபது சதவிகிதம் தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கு முன்னுரிமை திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளார். இதன் மூலம் ஏழை, எளிய, விளிம்புநிலை மாணவர்களின் அரசு வேலை என்கிற கனவு நனவாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில், ஒப்பந்தம் கோரப்பட்ட பல்வேறு பணிகளில் ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் கொண்டு வந்த தகவல் தொழில் நுட்ப புரட்சியின் காரணமாக, இலட்சக்கணக்கானோர் பயன் பெற்றார்கள். சென்னை மாநகரம் உலக அளவில் அறியப்பட்டது.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள்.

கா.ம.ந.எண்/அ2/0648/2026

தீர்மான எண்: 292/2026 **பொருள் எண்.01**

பெருநகர சென்னை மாநகராட்சி – கால்நடை மருத்துவத் துறை – "ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகம்" (Jayanthi Daisy Shelter for Animals) – Ms. ஜெயந்தி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களுக்கு சொந்தமான ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பக நிலம் மற்றும் கட்டிடங்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கொடையாக (Gift) வழங்க விருப்பம் தெரிவித்துள்ளார் – மேற்கண்ட நிலத்தை கொடையாக பெற்று விலங்குகள் காப்பகத்தை நிர்வகிக்கும் பொறுப்பை பெருநகர சென்னை மாநகராட்சி ஏற்று நிர்வகிக்க அரசின் கருத்துரு மற்றும் அனுமதி வேண்டி கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி.

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் "ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகமானது" (Jayanthi Daisy Shelter for Animals) கிழக்கு கடற்கரைச் சாலை (ECR) மற்றும் பழைய மகாபலிபுரம் சாலை (OMR) பகுதிகளில் இருந்து மீட்கப்படும் தெருநாய்கள் மற்றும் பூனைகளுக்கு சிகிச்சை மற்றும் நிரந்தர பராமரிப்பு வழங்கி வருகிறது.

இக்காப்பகம், செங்கல்பட்டு தாலுகா, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், நெம்மேலி கிராமத்தில், சர்வே எண்கள் 113/16B, 113/19C, 113/16A மற்றும் பட்டா எண் 2218–இல், புல எண் 113/16A2 மற்றும் 113/16B2–ல் மொத்தம் 7,709 சதுர அடிகள் பரப்பளவு கொண்ட நிலத்தில் அமைந்துள்ளது.

இந்த விலங்குகள் காப்பகம் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் திட்டம்" மூலம் நிதியுதவி பெற்று, காயமடைந்த மற்றும் கைவிடப்பட்ட நாய்கள் மற்றும் பூனைகளை பராமரித்து வருகிறது. இருப்பினும், 2024–2025 நிதியாண்டுடன் அந்நிதியுதவி நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலத்தின் உரிமையாளரான Ms. ஜெயந்தி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களின், 04.06.2026 நாளிட்ட கடிதத்தில், ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகம் (Jayanthi Daisy Shelter for Animals) அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடங்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கொடையாக (Gift) எவ்வித நிதி பரிவர்த்தனையும் இன்றி வழங்க விருப்பம் தெரிவித்தும், தற்போது அங்கு பராமரிக்கப்பட்டு வரும் சுமார் 250 நாய்கள் மற்றும் 80 பூனைகளுடன் விலங்குகள் காப்பகத்தை பெருநகர சென்னை மாநகராட்சி ஏற்று நடத்துமாறும் கோரியுள்ளார்.

இதன் அடிப்படையில் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 13.06.2026 அன்று தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மற்றும் கூடுதல் தலைமை கால்நடை மருத்துவ அலுவலர்கள் அடங்கிய குழுவினர் விலங்குகள் காப்பகத்தை ஆய்வு செய்தனர். ஆய்வின் போது, விலங்குகள் காப்பகத்தில் சுமார் 250 நாய்கள் மற்றும் 80 பூனைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருவது உறுதி செய்யப்பட்டது.

மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் 19.05.2026 அன்று வழங்கிய உத்தரவின்படி, கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், விளையாட்டு அரங்குகள், பேருந்து நிலையங்கள், பேருந்து பணிமனைகள், இரயில் நிலையங்கள் உள்ளிட்ட பொது நிறுவன வளாகங்களில் உள்ள தெருநாய்கள் அகற்றப்பட்டு, அவற்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னரும் மீண்டும் அவற்றை அதே இடங்களில் விடுவிக்காமல், அங்கீகரிக்கப்பட்ட விலங்குகள் காப்பகத்தில் வைத்து பராமரிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

மேற்கண்ட உத்தரவினை செயல்படுத்தும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மணலி மற்றும் பெருங்குடி மண்டலங்களில் தலா 250 நாய்களை பராமரிக்கக்கூடிய இரண்டு நாய்கள் காப்பகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், பொது வளாகங்களில் இருந்து மீட்கப்படும் நாய்களை நிரந்தரமாக வைத்து பராமரிப்பதற்கு கூடுதல் நாய்கள் காப்பகங்கள் தேவைப்படுகிறது. இந்நிலையில், ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகத்தை ஏற்று நடத்துவது அவசியமாகிறது.

இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சியின் முதுநிலை சட்ட அலுவலரின் சட்ட ஆலோசனை பெறப்பட்டதில், அறக்கட்டளைக்கு மேற்கண்ட சொத்தில் தனித்த உரிமையோ, தலைப்புரிமையோ அல்லது நலனோ இல்லை என்பதையும், சொத்தினை மாநகராட்சிக்கு கொடையாக வழங்குவதற்கு அறங்காவலர் குழுவிற்கு (Board Trustees) ஆட்சேபனை இல்லை என்பதையும் உறுதி செய்யும் தீர்மானத்தை அறங்காவலர் குழுவிடமிருந்து (Board Trustees) பெறுவது சட்டரீதியாக அவசியம் என கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அறங்காவலர் குழுவின் (Board Trustees) ஆட்சேபனையின்மை (No Objection Resolution Letter) தீர்மானம் பெறப்பட வேண்டியுள்ளது.

இவ்விலங்குகள் காப்பகத்தை மாநகராட்சி ஏற்றுக்கொள்வதன் மூலம் தற்போது அங்கு பராமரிக்கப்பட்டு வரும் விலங்குகளின் நலன், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு உறுதி செய்யப்படுவதுடன், மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின்படி பொது வளாகங்களில் இருந்து மீட்கப்படும் தெருநாய்களை பராமரிப்பதற்கான கூடுதல் வசதியும் ஏற்படுத்தப்படும்.

இதற்கு முன் உதாரணமாக தொழுநோய் காப்பகம் மற்றும் மருத்துவமனை அமைப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்கு வெளியே உள்ள மாடம்பாக்கம் பகுதியில் சுமார் 30.35 ஏக்கர் நிலம் மறைந்த திரு R.M. அழகப்ப செட்டியார் அவர்களிடமிருந்து கடந்த 1946 ஆம் ஆண்டு தானமாக பெறப்பட்டு பெருநகர சென்னை

மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே, ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகத்தின் நிலம் மற்றும் கட்டிடங்களை சட்டப்பூர்வமாக கொடையாகப் பெற்று, பெருநகர சென்னை மாநகராட்சியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர அரசின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்ப வேண்டியுள்ளது.

எனவே,

1. செங்கல்பட்டு தாலுகா, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், நெம்மேலி கிராமத்தில், சர்வே எண்கள் 113/16B, 113/19C, 113/16A மற்றும் பட்டா எண் 2218-இல், புல எண் 113/16A2 மற்றும் 113/16B2–ல் மொத்தம் 7,709 சதுர அடிகள் பரப்பளவு கொண்ட நிலத்தில் அமைந்துள்ள ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகத்தை (Jayanthi Daisy Shelter for Animal) சட்டப்பூர்வ நடைமுறைகள் நிறைவு செய்யப்பட்டு தானமாக பெறப்பட்ட பின்னர் எவ்வித நிதி பரிவர்த்தனையும் இன்றி பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டில் கொண்டு வந்து அக்காப்பகத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும்,
2. Ms. ஜெயந்தி, இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களுக்கு விலங்குகள் காப்பகத்தில் உள்ள விலங்குகளின் நலனை கண்காணிக்கும் (Monitoring) பொறுப்பை வழங்கவும்,
3. விலங்குகள் காப்பகத்தின் (Jayanthi Daisy Shelter for Animal) தற்போதைய "ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகம்" என்ற பெயர் தொடர்வதற்கு அனுமதிக்கவும்,
4. "ஜெயந்தி டெய்ஸி விலங்குகள் காப்பகம்" நிலம் மற்றும் கட்டிடத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர அரசின் கருத்துரு மற்றும் அனுமதி வேண்டி கடிதம் அனுப்பவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"21.08.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.065/2026, நாள்.21.08.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"24.08.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.156/2026, நாள்.24.08.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/1006/2026

தீர்மான எண்: 293/2026 **பொருள் எண்.02**

பெருநகர சென்னை மாநகராட்சி – நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்-9 பகுதி-24 வார்டு -109 சூளைமேடு பகுதி கிழக்கு நமச்சிவாயபுரத்தில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு (02DA018NC) நியாய விலை கடைக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.

இணை இயக்குநர்/ உதவி ஆணையர் முதுநிலை, மண்டலம்–9 அவர்களின் 28.07.2026 நாளிட்ட குறிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9 பகுதி–24 வார்டு –109 சூளைமேடு பகுதி கிழக்கு நமச்சிவாயபுரத்தில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் (02DA018NC) நியாய விலை கடைக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது என்றும், இப்பொருள் குறித்து பல்நோக்கு கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு நிபந்தனை மற்றும் வாடகை அடிப்படையில் வழங்க மண்டலம்–9ன் வார்டு குழு தீர்மானம் நிறைவேற்றபட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, பகுதி–24, வார்டு–109, சூளைமேடு பகுதி கிழக்கு நமச்சிவாயபுரத்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 216 சதுர அடி (12x18) அளவுள்ள தரைதளத்துடன் உள்ள பல்நோக்கு கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு அரசு விதிமுறைகளின் படியும் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிபந்தனை அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்வதற்கு ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று மன்றத்தின் அனுமதி பெற்று தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

மண்டலம்–9, பகுதி–24,வார்டு–109,சூளைமேடு பகுதி கிழக்கு நமச்சிவாயபுரத்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 216 சதுர அடி(12x18) அளவுள்ள தரைதளத்துடன் உள்ள பல்நோக்கு கட்டிடத்தை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு ஒதுக்கீடு செய்து வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், THE TAMIL NADU URBAN LOCAL BODIES RULES, 2023, [G.O. Ms. No. 45, Municipal Administration and Water Supply (Election) Department, 12th April 2023–விதிகளின் படி பல்நோக்கு கட்டிடத்தில் தரைத்தளம் (216 சதுர அடி) கொண்ட கட்டிடத்தினை மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

1. மண்டலம்-9, பகுதி-24, வார்டு-109, சூளைமேடு பகுதி கிழக்கு நமச்சிவாயபுரத்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சுமார் 216 சதுர அடி(12x18) பரப்பளவுள்ள அறைக்கு மாத வாடகை ரூ. 1620/-+GST 18% ரூ. 292 = ஆக மொத்தம் ரூ 1912/- (ரூ.1620/–ன் தொகையை 12 மாதத்திற்கு முன் பணமாக ரூ. 19440 /-) செலுத்த வேண்டும்
2. தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி விதி 2023 பிரிவு 316ன்படி மூன்றாண்டு காலத்திற்கு மட்டுமே ஒதுக்கீடு பொருந்தும்.
3. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் 15% உயர்த்தப்படும்.
4. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும்.
5. மாத வாடகையினை ஒவ்வொரு மாதமும் மாதத்தின் 5ஆம் தேதிக்குள் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–09ல் செலுத்த வேண்டும்.
6. பின்வரும் காலங்களில் மாநகராட்சிக்கு தேவை ஏற்படின் உடனடியாக மூன்று மாதத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன்,

மேற்படி கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நியாய விலை கடைக்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.08.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.157/2026, நாள்.24.08.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

பொ.து.ந.க.எண்.ஈ3/02449/2026

தீர்மான எண்: 294/2026 **பொருள் எண்.03**

பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.

அரசாணை (வாலாயம்) எண்.2458, பொது (சிறப்பு–அ) துறை, நாள்.09.07.2026ன்படி, கீழ்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	செயல்முறை ஆணை எண். மற்றும் நாள்	அயற்பணியில் சேர்ந்த நாள்
1.	திரு.N.சத்தியநாராயணன், மாவட்ட வருவாய் அலுவலர்/ உதவி ஆணையர், முதுநிலை (மண்டலம்), மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (வாலாயம்) எண்.2458, பொது (சிறப்பு–அ) துறை, நாள்.09.07.2026.	27.07.2026 மு.ப.
2.	திரு.பெ.அரவிந்தன், மாவட்ட வருவாய் அலுவலர்/ உதவி ஆணையர், முதுநிலை (மண்டலம்), மண்டலம்–2, பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (வாலாயம்) எண்.2458, பொது (சிறப்பு–அ) துறை, நாள்.09.07.2026.	27.07.2026 மு.ப.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”

******

FAC.NO.L&G-1/2878/2026

தீர்மான எண்: 295/2026 **பொருள் எண்.04**

Greater Chennai Corporation – F.M.Unit - Mobilization of overdraft facility to be obtained from Nationalized Banks / Financial Institutions – Approval from Government – For Orders.

Over the last few years, the Greater Chennai Corporation (GCC) has undertaken several infrastructure projects, including the construction of Integrated Storm Water Drain networks, strengthening of Solid Waste Management services, development of parks and public open spaces, construction of hospitals and other public buildings, road infrastructure, and various other civic improvement initiatives.

While these capital expenditures have enhanced civic infrastructure across the city, they have also resulted in substantial financial commitments towards both operational expenditure and capital works, resulting in significant stress on GCC's financial position.

Further, GCC has accumulated unpaid liabilities towards both revenue expenditure and completed capital works. As on 19.08.2026, the total value of pending bills stands at **Rs.2,090.11 crore**, comprising **Capital Bills of Rs.1,280.97 crore** and **Revenue Bills of Rs.809.14 crore**. Owing to the delay in settlement of contractor bills, several contractors have resorted to bill discounting through the Receivables Exchange of India Limited (RXIL) under the Trade Receivables Discounting System (TReDS), enabling them to obtain early payments from financial institutions.

These discounted bills must be paid by GCC within the stipulated time period, failing which GCC is required to settle these discounted bills along with the applicable financing charges, resulting in an additional financial burden over and above the original cost of the works.

The details of the pending bills as on19.08.2026 are furnished in the table below:

PARTICULARS	TOTAL BILLS PENDING (RS. IN CR)	NON RXIL (RS. IN CR)	RXIL DISCOUNTING (RS. IN CR)
REVENUE BILLS (ADMIN, AND O&M)	809.14	614.67	194.47
CAPITAL BILLS - SCHEMES	483.46	263.60	219.86
CAPITAL BILLS - GCC FUND	797.51	469.93	327.58
TOTAL	**2090.11**	**1348.20**	**741.91**

Of the pending revenue bills, the bills related to Conservancy operations are detailed below:

- Rs. 280.21 Crore pertains to payments due to **Urbaser Sumeet**,
- Rs. 66.61 Crore pertains to payments due to **Chennai Enviro Solutions & Package Six Private Limited**

It is crucial to ensure adequate cash flow availability with GCC to meet its immediate financial obligations and facilitate timely settlement of pending bills, particularly payments to agencies engaged in Conservancy Services. Adequate liquidity is also essential to support the implementation of capital projects planned in the short and medium term and to meet expenditure requirements, including those arising during the North-East Monsoon. Accordingly, to address the immediate and medium-term cash flow requirements of GCC, it is proposed to avail of an Overdraft (OD) facility aggregating to Rs.300 crore from a bank offering the most favourable terms and interest rates. The proposed Rs.300 crore facility may be taken under the following three components:

1. **Rs.150 crore OD against Fixed Deposits (FDs):** An OD facility of Rs.150 crore may be availed against FDs created by temporarily transferring balances available in the below mentioned GCC bank accounts. The funds proposed to be utilised for creation of the FDs amount to approximately Rs.150.06 crore, as detailed below.These balances are presently earmarked for various specific purposes/projects, including Road Cut Deposits, Nirbhaya Fund, State Disaster Mitigation Fund, SWD Missing Link, CGF & OMGFF, DBFOT Toilets, Vadaperumbakkam Storm Water Drain and other schemes. The funds are not expected to be immediately required for utilisation and may therefore be temporarily placed as FDs and utilised to secure the OD facility.The identified accounts proposed for temporary transfer of funds for creation of FDs are as follows:

Sl. No.	**Name of the Account**	**Bank**	**Account No.**	**Funds to be Transferred (in Rs.)**
1	Nirbhaya Fund Account	ICICI	000901127961	32,98,00,000
2	Infrastructure and Amenities Fund	Axis	922010031545774	1,59,245
3	State Disaster Mitigation Fund	Axis	922010031555807	23,04,44,600
4	CUB - NUHM Account	CUB	500101014212602	2,99,31,321
5	Special Road Programme (2020-2021)	ICICI	000901129805	34,31,324
6	CGF and OMGFF	SBI	40827748663	1,31,32,133
7	SWD - Missing Link (TNSUDP)	SBI	40810424385	35,32,848

8	Road Cut Deposits	IDFC	10218287039	88,00,00,000
9	Road Cut Charges Collection Account **(Old)**	Canara	09762101404202	1,00,39,406
10	Endowment Fund Account	IOB	171101000003333	1,06,756
Total				**1,50,05,77,633**

As the funds are linked to specific projects/works where immediate cash requirements are not expected to arise, the temporary utilisation of funds in FDs would enable GCC to leverage the available balances for meeting its immediate liquidity requirements.

However, certain funds are expected to be required over the next 3–6 months as the projects and works progress. Hence, the FD-backed OD is proposed as an interim liquidity arrangement, with the OD being repaid as and when the underlying funds are required.

2. **Rs.150 crore General Overdraft Facility:** In addition, considering the mounting pending bills and other critical expenditure requirements of GCC, along with GCC's responsibility for undertaking monsoon preparedness, emergency response, disaster mitigation and other related expenditure, it is proposed to avail a further general OD facility of Rs.150 crore. This would provide GCC with the necessary liquidity to meet its immediate and temporary cash flow requirements and ensure timely settlement of pending bills and other critical expenditures, considering its prevailing financial position.

Hence, in this regards the following is the proposed Overdraft structure:

COMPONENT	**AMOUNT IN RS. CRORE**	**PURPOSE**
OD AGAINST FDS	150	IMMEDIATE LIQUIDITY AGAINST TEMPORARILY AVAILABLE FUNDS
GENERAL OD	150	MONSOON, DISASTER MITIGATION AND OTHER CRITICAL GENERAL EXPENDITURE
TOTAL	**300**	

Hence, approval of the Council through Standing Committee (Taxation and Finance) are requested for the following:

1. To avail an Overdraft facility of Rs.300 crore from a Scheduled Commercial Bank offering the most favourable terms and interest rates, comprising Rs.

150 crore OD against Fixed Deposits and a General Overdraft facility of Rs. 150 crore.

2. To address a letter to the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department, requesting permission for GCC to avail the overdraft facility of Rs 300 crore as proposed above.

"24.08.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.158/2026, நாள்.24.08.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.நி.பி.ந.க.எண்.க(ம)மா-1/532/2023

தீர்மான எண்: 296/2026 **பொருள் எண்.05**

பெருநகர சென்னை மாநகராட்சி – 25.10.2011 முதல் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியங்கள் மாநில நிதி மான்யத்திலிருந்து நகராட்சி நிர்வாக இயக்குனரகம் வழியாக மாநகராட்சிக்கு வழங்கப்படும் பகிர்வு நிதியிலிருந்து பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அலுவலகம் (நந்தனம், சென்னை-600 035) வழியாக வழங்கியது – செஅ.ஆ.60ன்படி மாநில நிதி மான்யம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நேரடியாக விடுவிக்க அறிவித்தது – ஏப்ரல் 2012 முதல் பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க மன்றத் தீர்மானம் பெற்று வழங்கப்பட்டு வருவது – மீண்டும் 10 எண்ணிக்கையிலான பேரூராட்சிகளிலிருந்து ஓய்வு பெற்ற 27 எண்ணிக்கையிலான ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியங்களை . ஜனவரி 2026 முதல் தொடர்ச்சியாக பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து வழங்க கோரியது – மற்றும் புதிய மருத்துவ காட்பீட்டு திட்டம் 2026, குடும்ப பாதுகாப்பு நலநிதித் திட்டம் 2022ன் படி பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுடன் இணைக்கப்பட்ட பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அமல்படுத்த மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகரட்சியுடன் இணைக்கப்பட்ட 1) ஆலந்தூர், 2) புழுதிவாக்கம், 3) அம்பத்தூர், 4) கத்திவாக்கம், 5) திருவொற்றியூர், 6) மாதவரம், 7) மதுரவாயல், 8) வளசரவாக்கம், 9)மணலி மற்றும் 10)வேளச்சேரி ஆகிய நகராட்சி / பேரூராட்சிகளில் பணிபுரிந்தவர்களுக்கான ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியங்களுக்கான நிதி, தமிழ்நாடு அரசு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கும், மாநில நிதி மான்யத்திலிருந்து (இம்மான்யம் அரசிடமிருந்து நேரடியாக, நகராட்சி நிருவாக இயக்குனரகத்திற்கு வழங்கப்படும்) உள்ளாட்சி நிதித் தணிக்கையில் கோரும் ஓய்வூதிய கேட்பில் உள்ள தொகைகளை, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பிடித்தம் செய்து கொண்டு, மீதத்தொகையை மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கி வந்தது. அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நகராட்சிகள் / பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்திற்கான பட்டிகள் நேரடியாக உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை (நந்தனம், சென்னை . 35) வாயிலாக அனுமதிக்கப்பட்டு தீர்வு செய்யப்பட்டு வந்தது.

2) அரசாணை நிலை எண்.60 நிதி (SFC–MC) துறை 28.02.2023 நாளிட்ட. அரசாணையில் 6வது மாநில நிதிக்குழு மான்யம் பெறுவது குறித்து பல்வேறு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக மாநில நிதிக்குழு மான்யத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் விடுவிக்கப்படக்கூடாது எனவும், மற்ற துறைகளைப் போலவே, பெருநகர சென்னை மாநகராட்சியும் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவு நீரகற்று வாரியமும்

தங்கள் நிதியினை கருவூலத்திலிருந்து நேரடியாகப் பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

3) அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியங்கள், பெருநகர சென்னை மாநகராட்சியே தொடந்து வழங்க முடிவு செய்யப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.88/2024 நாள்.26.07.2024ல், **ஏப்ரல் 2023 முதல்** உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் கேட்பின் படி தொடர்ச்சியாக ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியர்களுக்கான கேட்புத் தொகை பொதுத்துறை ஓய்வூதிய பிரிவிலிருந்து அனுமதிக்கப்பட்டு வருகிறது.

4) சிறப்பு இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை.10.07.2026 நாளிட்ட கடிதத்தில் அடையார், அம்பத்தூர், அமைந்தகரை, மணலி, சின்னசேக்காடு, மதுரவாயல், மீனம்பாக்கம், நந்தம்பாக்கம், போரூர், புழல் மற்றும் வேளச்சேரி ஆகிய பேரூராட்சிகள், பெருநகர சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்டதால், பேரூராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள் 10 நபர்களுக்கும் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் 17 நபர்களுக்கும், ஜனவரி 2026 முதல் ஜூன் 2026 முடிய உள்ள மாதங்களுக்கான ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய செலவினமாக வழங்கப்பட்ட தொகை மொத்தம் ரூ.23,69,779/. விடுவிக்குமாறு நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

5) மேலும், எதிர்வரும் மாதங்களுக்கு தொடர்ச்சியாக, மேலே பத்தி–4ல் குறிப்பிட்டுள்ள பெருநகர மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பேரூராட்சியிலிருந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு அனுமதிக்கப்படும் ஓ'ய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய தொகைக்கான கணக்கீடு உள்ளாட்சி நிதி தணிக்கையிலிருந்து அனுப்பப்படும் கேட்பில் குறிப்பிடும் தொகையை அனுமதித்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வங்கி எண். 130701000012041 (IFSC CODE No.IOBA0001307) என்ற வங்கி கணக்கிற்கு தொகையினை விடுவித்திட கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

6) இதன்மீது சமர்பித்துக் கொள்வது, மேலே பத்தி–1ல் குறிப்பிட்டுள்ள 10 எண்ணிக்கையிலான நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் பெருநகர சென்னை மாநரகாட்சியுடன் 25.10.2011 முதல் இணைக்கப்பட்ட காரணத்தால், இணைக்கப்பட்ட நகராட்சி / பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியத்திற்கான நிதி பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது, இந்நிலையில் தற்போது மேலே பத்தி–4ல் குறிப்பிட்டுள்ள நகராட்சி/ பேரூராட்சிகள் ஏற்கனவே ஊராட்சி/ நகராட்சியாக இருந்த போது பத்தி –1ல் குறிப்பிட்டுள்ள நகராட்சி/ பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டபோது பணியாளருக்கான ஊதியங்கள் மட்டுமே, புதிதாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சி/பேரூராட்சியில் வழங்கப்பட்டு வந்தது, ஓய்வூதியங்கள் உள்ளாட்சி நிதி தணிக்கையினரால் மாநில நிதி பகிர்விலிருந்து

பெற்று நேரடியாக ஓய்வூதியங்கள் அனுமதிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது மாநில நிதி பகிர்வு அந்தந்த மாநகராட்சிகளுக்கு நேரடியாக வழங்கப்படுவதால், தற்போது ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து வழங்க வேண்டியுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட அடையார், அம்பத்தூர், அமைந்தகரை, மணலி, சின்னசேக்காடு, மதுரவாயல், மீனம்பாக்கம், நந்தம்பாக்கம், போரூர், புழல் மற்றும் வேளச்சேரி ஆகிய நகராட்சி/ பேரூராட்சியிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் (10 நபர்கள்) / குடும்ப ஓய்வூதியம் (17 நபர்கள்) பெறுபவர்களுக்கு ஓய்வூதியங்கள் தொடர்ச்சியாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்படும் மாநில நிதிக்குழு மான்யத்திலிருந்து (SFC Grant) வழங்க வேண்டியுள்ளது.

எனவே,

அ) சிறப்பு இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கையின் 10.07.2026 மற்றும் 13.08.2026 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி, ஜனவரி 2026 முதல் ஜூன் 2026 முடிய உள்ள மாதங்களுக்கான ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதிய செலவினமாக வழங்கப்பட்ட தொகை மொத்தம் ரூ.23,69,779/-யை RTGS வழியாக அனுப்பி கொள்ளவும், இனிவரும் மாதங்களுக்கும் தொடச்சியாக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதிய தொகைகளை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, சென்னை– 35க்கு செலுத்திக் கொள்ளவும்,

ஆ) மேலும், மாதந்தோறும் தோராயமாக ரூ.3.95 இலட்சம் அளவில் செலவினம், இருப்பதால் பெருநகர சென்னை மாநகராட்சி பொதுத்துறை (ஓய்வூதியப் பிரிவின்) கீழ் ஏற்கனவே, உருவாக்கப்பட்டுளள கணக்கு தலைப்பு எண்.00-02-01/210-300-101 (Pension added Area)லிருந்து ஓய்வூதிய தொகையினை விடுவித்திடவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 24.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.169/2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

மஅ.15.ந.க.எண். பி1/3264/2026

தீர்மான எண்: 297/2026 **பொருள் எண்.06**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்–15, பகுதி – 44, கோட்டம் – 199 சோழிங்கநல்லூர் பகுதியில் இஸ்லாமிய சமூகத்திற்கு அடக்கஸ்தலம் அமைக்க மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இஸ்லாமிய சமூகத்தினரால் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டதில் இஸ்லாமிய அடக்கஸ்தலம் அமைக்க நிலம் ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது – சோழிங்கநல்லூர் -1 கிராமத்தில் புலத்தணிக்கை செய்யப்பட்டதில் புல எண்.236/19ல் வருவாய் கணக்கில் வகைப்பாடு அரசு புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் 217.50 ஏர்ஸ் (21700 ச.மீ பரப்பளவு) மயானம் என தாக்கலாகி உள்ளது – இவ்விடத்தில் இஸ்லாமிய அடக்கஸ்தலம் அமைக்க 2023 ச.மீ பரப்பளவு ஒதுக்க மன்றத்தின் அனுமதி.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இஸ்லாமிய சமூகத்தினர் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.C.P.No.2954/2025–க்கு 09.01.2026 நாளிட்ட தீர்ப்பாணையில் உடனடியாக நிலம் ஒதுக்கீடு செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

இது குறித்து பெருநகர சென்னை மாநராட்சி, மண்டலம்–15, பகுதி–44, கோட்டம்–199 சோழிங்கநல்லூர் 1 கிராமத்தில் புல எண்.236/19ல் வருவாய் கணக்கில் வகைப்பாடு அரசு புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் 217.50 ஏர்ஸ் (21700 ச.மீ பரப்பளவு) மயானம் என தாக்கலாகி உள்ளது. இந்நிலத்தில் இஸ்லாமிய அடக்கஸ்தலம் செய்திட 2023 ச.மீ பரப்பளவு ஒதுக்க 16.07.2026 அன்று நடைப்பெற்ற 15வது மண்டல வார்டுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி, மண்டலம் – 15, பகுதி – 44, கோட்டம் – 199 சோழிங்கநல்லூர் 1 கிராமத்தில் புல எண்.236/19ல் வருவாய் கணக்கில் வகைப்பாடு அரசு புறம்போக்கு மொத்த விஸ்தீரணம் 217.50 ஏர்ஸ் (21700 ச.மீ பரப்பளவு) மயானத்தில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலும், 15வது மண்டல வார்டுக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையிலும், இஸ்லாமிய சமூகத்திற்கு அடக்கஸ்தலம் அமைக்க 2023 ச.மீ பரப்பளவு

ஒதுக்கிட, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.066/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 24.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.159/2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.4.ந.க.எண்.சி2/1530/2026

தீர்மான எண்: 298/2026 **பொருள் எண்.07**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் -4, பகுதி -9, கோட்டம் 34 முதல் 38 வரை மற்றும் கே.டி.ஐயில் தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) கீழ் மண்டலம் -5 லிருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 746 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் – அப்பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 உடன் முடிவடைவதால் 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மொத்தம் 746 தூய்மை பணியாளர்களை அண்டை

வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக தூய்மை பணிகளை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் –4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், மற்றும் வியாசர்பாடி போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும், மேலும் , வள்ளலார் நெடுஞ்சாலை உள்ளடக்கிய 11.8 கி.மீ நீளமுள்ள 16 பேருந்து சாலைகள் மற்றும் 131.2 கி.மீ நீளமுள்ள 949 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் –4க்குட்பட்ட பகுதிகளில், முல்லை நகர் சுடுகாடு, சீதாராம் நகர் சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், உணவகங்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக்கழிப்பிடங்கள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேலும், KDG பகுதியில் அதிகப்படியான குப்பைகள் தேக்கம் அடைவதாலும், பொதுமக்களுக்கு தொற்று நோய் ஏற்படாமல் தவிர்ப்பதற்கும் கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மண்டலம்–4, பகுதி–9, கோட்டம்–34 முதல் 38 வரை மற்றும் கே.டி.ஜியில் 249 நிரந்தர பணியாளர்கள் மற்றும் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) கீழ் மண்டலம்–5லிருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 746 தூய்மை பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், 09.02.2018 நாளிட்ட ஆணையின்படியும் மற்றும் முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர், சென்னை –6 அவர்களின், கடித எண் செ3/5476/2024–3, நாள்:02.05.2024ல் தெரிவித்துள்ள corrigendum ல் அரசாணை எண்.62ல் சுட்டிக்காட்டப்பட்ட The DA is linked to the Average Consumer Price Index number of the city for the year 2019/That is 161 points an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance ன் படி அகவிலைப்படி ரூ.6593/– ம் மற்றும் unskilled தொழிலாளர்களுக்கு Minimum Rate of Basic Wagesன்படி தினக்கூலியாக ரூ.761/– என கணக்கிடப்பட்டுள்ளது–

கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின், 10.07.2024 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை, மண்டலங்களிலும் (கல்வித்துறை உட்பட) அண்டை வீட்டு குழுவின் (SHG) மற்றும் NMR கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் unskilled தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே, 05.07.2024 முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.753/– வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், 01.04.2025

முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.761/– என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–4, பகுதி–9, தூய்மை துறையில் கோட்டம் – 34 முதல் 38 வரை மற்றும் கே.டி.ஜியில் மேற்கண்ட 561 தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள 01.12.2025 முதல் 28.02.2026 வரை மூன்று மாத காலத்திற்கு மன்றத் தீர்மான எண்.1249/2025, நாள்.19.12.2025–ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மண்டலம்–5ல் இருந்து 23.01.2026 அன்று 350 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களும், 29.01.2026 அன்று 200 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களும் மண்டலம்–4ற்கு அனுப்பப்பட்டனர். இப்பணியாளர்களுக்கு 23.01.2026 முதல் 28.02.2026 வரையிலான காலத்திற்கு மன்றத் தீர்மான எண்.190/2026, நாள்.20.02.2026–ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது–

மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர்–4 அவர்களின் ஒப்புதலில் மேற்கண்ட 746 SHG தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 அன்றுடன் முடிவடைவதால், 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மண்டலம்–5 லிருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 746 SHG பணியாளர்கள் தூய்மை பணியில் ஈடுபடுத்த ஆணையர் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்–4 அவர்களின் ஆணை பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

<u>அட்டவணை</u>

<u>துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு</u>

வ.எண்	கோட்டம்	மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை	தற்போது பணிபுரியும் நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை	மன்றத்தீர்மானம் பெறப்பட்ட SHG பணியாளர்கள் எண்ணிக்கை	மண்டலம் –5 ல் இருந்து கூடுதலாக அனுப்பப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை(SHG)	மொத்த தற்காலிக தூய்மை (SHG) பணியாளர்களின் எண்ணிக்கை	தலைமை பொறியாளர் (SWM) அவர்களின் சுற்றறிக்கை நாள் :10.08.2023 (தி.க.மே.து.ந.க.எண்.அ3/39 74/2023)	தோராய செலவினம் ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1.	34	165	45	132	41	173		

2	35	150	57	107	36	143	ரூ.761/-	ரூ.761/- x 746 (SHG தூய்மை பணியாளர்கள்) x 92 நாட்கள் = ரூ.5,22,28,952/-
3	36	130	42	107	35	142		
4	37	140	56	114	32	146		
5	38	103	47	69	41	110		
6	KDG	55	22	32	0	32		
மொத்தம்		743	249	561	185	746		

எனவே, மண்டலம்–4, பகுதி–9, கோட்டம்–34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 746 தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள 01.03.2026 முதல் 92 நாட்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

(அ)	மண்டலம்–4, பகுதி–9 கோட்டம்–34 முதல் 38 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகள் மேற்கொள்ள மண்டலம்–5 லிருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 746 பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 01.03.2026 முதல் 92 நாட்களுக்கு எடுத்துக்கொள்ள அனுமதியும் ,
(ஆ)	ஆணையர் அவர்களின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.761/– வீதம் 746 நபர்கள் x 92 நாட்கள் x ரூ.761/– = ரூ.5,22,28,952/– (ரூபாய் ஐந்து கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து இரண்டு மட்டும்) அனுமதியும் ,
(இ)	தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் SHG தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும் ,
(ஈ)	தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும் ,
(உ)	நிதி ஆலோசகர் மூலமாக ரூ.5,22,28,952/– (தலைப்பு எண்: 40–41–03 payment to casual staff conservancy works , கணக்கு குறியீடு எண்.210–100–

	601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும் ,
(ஊ)	மண்டலம்–4ல் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்களில் (SHG) 60 வயதை கடந்த பணியாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என சான்றளிக்கப்படுகிறது

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.067/2026–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 24.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.160/2026, நாள்.27.08.2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.4.ந.க.எண்.சி2/1531/2026

தீர்மான எண்: 299/2026 **பொருள் எண்.08**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-4 , பகுதி -10 , கோட்டம் 39 முதல் 43 வரை தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) கீழ் மண்டலம்-5 ல் இருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 455 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் – அப்பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 உடன் முடிவடைவதால் 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மொத்தம் 455 தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக தூய்மை பணிகளை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் –4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், மற்றும் வியாசர்பாடி போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும், மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை உள்ளடக்கிய 17.75 கி.மீ நீளமுள்ள 16 பேருந்து சாலைகள் மற்றும் 131.2 கி.மீ நீளமுள்ள 1057 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, காசிமேடு சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக்கழிப்பிடங்கள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மண்டலம் –4 , பகுதி –10 , கோட்டம் – 39 முதல் 43 வரை 303 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 455 அண்டை வீட்டு குழுக்கள் (SHG) பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், 09.02.2018 நாளிட்ட ஆணையின்படியும் மற்றும் முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர், சென்னை–6 அவர்களின், கடிதஎண் செ3/5476/2024–3 , நாள்: 02.05.2024 ல் தெரிவித்துள்ள corrigendumல் அரசாணை எண்.62ல் சுட்டிக்காட்டப்பட்ட The DA is linked to the Average Consumer Price Index number of the city for the year 2019/That is 161 points an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance ன் படி அகவிலைப்படி ரூ.6593/– ம் மற்றும் unskilled தொழிலாளர்களுக்கு Minimum Rate of Basic Wagesன் படி தினக்கூலியாக ரூ.761/– என கணக்கிடப்பட்டுள்ளது–

கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின், 10.07.2024 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை, மண்டலங்களிலும் (கல்வித்துறை உட்பட) அண்டை வீட்டு குழுவின் (SHG) மற்றும் NMR கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் unskilled தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே, 05.07.2024 முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.753/- வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், 01.04.2025 முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.761/- என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்-4 , தூய்மை துறையில் கோட்டம் - 39 முதல் 43 வரை மேற்கண்ட 266 தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள 01.12.2025 முதல் 28.02.2026 வரை மூன்று மாத காலத்திற்கு, மன்றத் தீர்மான எண்.1249/2025, நாள்.19.12.2025-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம் -5ல் இருந்து 23.01.2026 அன்று 350 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களும் 29.01.2026 அன்று 200 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களும் மண்டலம்-4 ற்கு அனுப்பப்பட்டனர். இப்பணியாளர்களுக்கு மன்ற தீர்மானம் பெறுவதற்கு கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. கோப்பு எண்: C2/867/2026 / E - office no : 693714

மாவட்ட வருவாய் அலுவலர்/ மண்டல அலுவலர்-4 அவர்களின் ஒப்புதலில் மேற்கண்ட 455 SHG தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 அன்றுடன் முடிவடைவதால், 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மொத்தம் 455 SHG பணியாளர்கள் தூய்மை பணியில் ஈடுபடுத்த ஆணையர் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மண்டல அலுவலர்-4 அவர்களின் ஆணை பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

<u>அட்டவணை</u>

<u>துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு</u>

வ.எண்	கோட்டம்	மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை	தற்போது பணிபுரியும் நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை	மன்றத்தீர்மானம் பெறப்பட்ட SHG பணியாளர்கள் எண்ணிக்கை	மண்டலம் -5 ல் இருந்து கூடுதலாக அனுப்பப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை (SHG)	மொத்த தற்காலிக தூய்மை (SHG) பணியாளர்களின் எண்ணிக்கை	தலைமை பொறியாளர் (SWM) அவர்களின் சுற்றறிக்கை நாள் :10.08.2023 (தி.க.மே.து.ந.க.எண். அ3/3974/2023)	தோராய செலவினம் ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1	39	87	56	51	41	92	ரூ.761/-	ரூ.761/- x 455 (SHG தூய்மை பணியாளர்கள்) x 92 நாட்கள் = ரூ.3,18,55,460/-
2	40	93	53	52	33	85		
3	41	101	63	47	33	80		
4	42	102	73	48	41	89		
5	43	100	58	68	41	109		
மொத்தம்		483	303	266	189	455		

எனவே, மண்டலம் –4, பகுதி –10, கோட்டம்–39 முதல் 43 வரை தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 455 தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள 01.03.2026 முதல் 92 நாட்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

(அ)	மண்டலம்–4 , பகுதி –10, கோட்டம்–39 முதல் 43 வரை தூய்மை பணிகள் மேற்கொள்ள மண்டலம்–5ல் இருந்து பெறப்பட்ட 455 SHG பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 01.03.2026 முதல் 92 நாட்களுக்கு எடுத்துக்கொள்ள அனுமதியும்,
(ஆ)	ஆணையர் அவர்களின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.761/– வீதம் 455 நபர்கள் x 92 நாட்கள் x ரூ.761/– = ரூ.3,18,55,460/– (ரூபாய் மூன்று கோடியே பதினெட்டு இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து நானூற்று அறுபது மட்டும்) பெற அனுமதியும்,
(இ)	தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் SHG தொழிலாளர்கள் தொடர்ந்து

	பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும்,,
(ஈ)	தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும்,
(உ)	நிதி ஆலோசகர் மூலமாக ரூ.3,18,55,460/- (தலைப்பு எண்: 40-41-03 payment to casual staff conservancy works , கணக்கு குறியீடு எண்.210-100-601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,
(ஊ)	மன்ற தீர்மானம் பெறப்பெற்ற 455 தற்காலிக தூய்மை பணியாளர்கள் விடுப்பு துய்க்கும் பட்சத்தில் 10 சதவீதம் பதிலி பணியாளர்களை பணியமர்த்துவதற்கு அனுமதி வேண்டியும்,
(எ)	மண்டலம்-4ல் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்களில் (SHG) 60 வயதை கடந்த பணியாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என சான்றளிக்கப்படுகிறது.

மேற்கண்ட அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.068/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 24.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை

பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.161/2026, நாள்.27.08.2026–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.4.ந.க.எண்.சி2/1532/2026

தீர்மான எண்: 300/2026 **பொருள் எண்.09**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் -4 – கோட்டம் 44 முதல் 48 வரை தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) கீழ் மண்டலம் -5ல் இருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 496 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டனர் – அப்பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 உடன் முடிவடைவதால் 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மொத்தம் 496 தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக தூய்மை பணிகளை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர் மற்றும் வியாசர்பாடி போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும், மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்ப்பேட்டை நெடுஞ்சாலை உள்ளடக்கிய 17.75 கி.மீ நீளமுள்ள 16 பேருந்து சாலைகள் மற்றும் 131.2 கி.மீ நீளமுள்ள 1057 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, காசிமேடு சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக்கழிப்பிடங்கள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மண்டலம்–4, பகுதி –11 , கோட்டம் – 44 முதல் 48 வரை 287 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 496

அண்டை வீட்டு குழுக்கள் (SHG) பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை சென்னை மாநகராட்சி ஆணையர், அவர்களின் 09.02.2018 நாளிட்ட ஆணையின்படியும் மற்றும் முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர், சென்னை–6 அவர்களின், கடிதஎண்.செ3/5476/2024–3, நாள்:02.05.2024ல் தெரிவித்துள்ள corrigendum ல் அரசாணை எண்.62 ல் சுட்டிக்காட்டப்பட்ட The DA is linked to the Average Consumer Price Index number of the city for the year 2019/That is 161 points an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance ன் படி அகவிலைப்படி ரூ.6593/– ம் மற்றும் unskilled தொழிலாளர்களுக்கு Minimum Rate of Basic Wagesன்படி தினக்கூலியாக ரூ.761/– என கணக்கிடப்பட்டுள்ளது–

கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின், 10.07.2024 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை, மண்டலங்களிலும் (கல்வித்துறை உட்பட) அண்டை வீட்டு குழுவின் (SHG) மற்றும் NMR கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் unskilled தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே , 05.07.2024 முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.753/– வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், 01.04.2025 முதல் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.761/– என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–4, தூய்மை துறையில் கோட்டம் – 44 முதல் 48 வரை மேற்கண்ட 320 தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள 01.12.2025 முதல் 28.02.2026 வரை மூன்று மாத காலத்திற்கு மன்றத் தீர்மான எண்.1249/2025, நாள்.19.12.2025–ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மண்டலம்–5ல் இருந்து 23.01.2026 அன்று 350 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களும் 29.01.2026 அன்று 200 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்களும் மண்டலம்–4ற்கு அனுப்பப்பட்டனர். இப்பணியாளர்களுக்கு 23.01.2026 முதல் 28.02.2026 வரையிலான காலத்திற்கு மன்றத் தீர்மான எண்.190/2026, நாள்.20.02.2026–ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது–

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்–4 அவர்களின் ஒப்புதலில் மேற்கண்ட மண்டலம்–5ல் இருந்து பெறப்பட்ட SHG பணியாளர்கள் உட்பட 496 SHG தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 28.02.2026 அன்றுடன் முடிவடைவதால், 01.03.2026 முதல் மேலும் 92 நாட்களுக்கு மொத்தம் 496 SHG பணியாளர்கள் தூய்மை பணியில் ஈடுபடுத்த ஆணையர் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மண்டல அலுவலர்–4 அவர்களின் ஆணை பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட

பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது

அட்டவணை

துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு

வ.எண்	கோட்டம்	மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை	தற்போது பணிபுரியும் நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை	மன்றத்தீர்மானம் பெறப்பட்ட SHG பணியாளர்கள் எண்ணிக்கை	மண்டலம் –5 ல் இருந்து கூடுதலாக அனுப்பப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை (SHG)	மொத்த தற்காலிக தூய்மை (SHG) பணியாளர்களின் எண்ணிக்கை	தலைமை பொறியாளர் (SWM) அவர்களின் சுற்றறிக்கை நாள் :10.08.2023 (தி.க.மே.து.ந.க.எண்.அ3/397 4/2023)	தோராய செலவினம் ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1	44	94	41	69	36	105	ரூ.761/-	ரூ.761/- x 496 (SHG தூய்மை பணியாளர்கள்) x 92 நாட்கள் = ரூ.3,47,25,952/-
2	45	114	56	84	36	120		
3	46	99	43	77	35	112		
4	47	88	66	52	33	85		
5	48	93	81	38	36	74		
மொத்தம்		488	287	320	176	496		

எனவே, மண்டலம்–4, பகுதி –11, கோட்டம்–44 முதல் 48 வரை தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 496 தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள 92 நாட்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

(அ)	மண்டலம்–4, பகுதி –11, கோட்டம்–44 முதல் 48 வரை தூய்மை பணிகள் மேற்கொள்ள 496 SHG பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 92 நாட்களுக்கு எடுத்துக்கொள்ள அனுமதியும்,
(ஆ)	ஆணையர் அவர்களின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.761/– வீதம் 496 நபர்கள் x 92 நாட்கள் x ரூ.761/– = ரூ.3,47,25,952/– (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்து ஏழு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து

	ஐம்பத்து இரண்டு மட்டும்) பெற அனுமதியும் ,
(இ)	தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் SHG தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும்,
(ஈ)	தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும்,
(உ)	நிதி ஆலோசகர் மூலமாக ரூ.3,47,25,952/– (தலைப்பு எண்: 40–41–03 payment to casual staff conservancy works , கணக்கு குறியீடு எண்.210–100–601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,
(ஊ)	மண்டலம்–4ல் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்களில் (SHG) 60 வயதை கடந்த பணியாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என சான்றளிக்கப்படுகிறது ,

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 21.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 27.08.2026 அன்று தீர்மான எண்.069/2026-ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் கூட்டம் 24.08.2026 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டும் பெரும்பான்மை உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.162/2026, நாள்.27.08.2026-ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம)நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.4.ந.க.எண்.சி2/4041/2026

தீர்மான எண்: 301/2026 **பொருள் எண்.10**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் -4 – கோட்டம் 34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்களின் (SHG) கீழ் 1690 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர் – தற்பொழுது இப்பணியாளர்களும் போதுமானதாக இல்லாத காரணத்தினால் மண்டலம் -5 மற்றும் 6ல் இருந்து 145 தற்காலிக (SHG) தூய்மை பணியாளர்கள் மற்றும் 13.03.2026 அன்று 45 பணியாளர்கள் மண்டலம்-4 ல் பணியமர்வு செய்தமைக்கும் மற்றும் 01.03.2026 முதல் 84 நாட்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

